SS Digital's
Printers for all requirements
சகல விதமான
அச்சு
வேலைகளுக்கும்
#58, Vidyalayam Road, Trincomalee.
Off: 026 2224933 Mob: 0715415854, 0773663103
ssdigitals.shan@gmail.com

தை மாதம் 06ம் திகதி

January 19, 2013

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 26

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

## அதிரடியில் புதிய கல்விப் பணிப்பாளர் !

### ஒரு வாரத்தில் ஆயிரம் ஆசிரியர்களின் பதவிகள் - உறுதிப்படுத்தப்பட்டன -

சனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து கிழக்கு மாகாணத்தின் புதிய கல்விப் பணிப்பாளராகப் பதவி யேற்றுள்ள திரு. எம்.ரி.ஏ. நிசாம் அவர்களின் அதிரடி நடவடிக்கையால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் பதவி உறுதிப்படுத்தல் நடவடிக்கைகள் ஒரு வாரத்தினுள் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளன.

இம்மாதம் 7ம் திகதி முதல் 11ம் திகதி வரையான ஐந்து நாட்களும் -பதவி உறுதிப்படுத்தல் வாரமாக- கிழக்கு மாகாணகல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டதைத் (7ம் பக்கம்)

## ஷரீ ஆ சட்டத் தீர்ப்பை முழுமையாக ஏற்கின்றேன் !

-ரஸீனா நபீக்-

எனது மகள் ரிசானாவை அல்லாஹ் தான் தந்தான். இப்போது அவன் தான் எடுத்துள்ளான். இது தான் என் உறுதியான நம்பிக்கை என சிரச்சேதம் செய்யப்பட்ட ரிசானாவின் (7ம் பக்கம்)

## ரிசானாவிற்குப் போலிப் பிறப்பத்தாட்சியை வழங்கியவர்களுக்குத் தண்டனை !

ரிசானாவிற்கு போலிப் பிறப்பத்தாட்சிப் பத்திரத்தைத் தயாரித்தளித்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகிய மூன்று சந்தேக நபர்களும் குற்றவாளிகளாக உருதியாகியதால் (7ம் பக்கம்)

## தாதியர்களுக்கும் சிற்றூழியர்களுக்கும் முரண்பாடு !

### பொது வைத்தியசாலையில் - பிணக்கு -

ஊழியர்களின் பணி உடையில் ஏற்பட்டுள்ள குழப்பம் காரணமாக திருமலைப் பொது வைத்திய சாலையில் தாதியர்ளுக்கும் சிற்றூழியர்களுக்கும் இடையே கடும் முரண்பாடுகள் எழுந்துள்ளன.

தாதியர்களின் பணி உடையை ஒத்த உடையினையே சிற்றூழியர்களும் அணிந்துள்ளதாக தாதியர்கள் கருது கின்றனர்.


இதனால் நோயாளர்களுக்கும் வைத்தியசாலைக்கு (7ம் பக்கம்)

# நான் வீடு திரும்ப ஏதும் வாய்ப்புக்கள் உண்டா ?

ரிசானாவின் இறுதிக் கேள்வி தான் வீடு திரும்புவதற்கான யாதேனும் வாய்ப்புக்கள் உள்ளனவா? என்பதை அறிவதாகவே இருந்தது என மேற்காசியாவிற்கான முஸ்லிம் விவகார அலுவலகளுக்கான இலங்கைச் சனாதிபதியின் ஆலோசகர் அப்துல் காதர் அவர்கள் கூறியுள்ளார். ரிசானாவைச் சிரச்சேதம் செய்வதற்கு முன்னரான சனிக்கிழமை அவரைச் சிறைச்சாலையில் சந்தித்துப் பேசிய திரு அப்துல் காதரிடம் ரிசானா தான் வீடு திரும்ப வேண்டும் என்ற அசையாத எண்ணத்தை வெளிப்படுத்தி யிருந்துள்ளார். எனினும் அத்தினத்தில் தான் அதுவரை சேமித்து (அவத்துஜத்த

# திருமலை புனித சூசையப்பர் கல்லூரி மாணவர்கள் சாதனை

## தேசிய புத்தாக்கப் போட்டியில் முதலிடம்



தேசிய புத்தாக்கப் போட்டியில் புனித சூசையப்பர் கல்லூரி மாணவர்களின் புத்தாக்கக் கண்டுபிடிப்பு அகில இலங்கையில் முதலிடம் பெற்று மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. இக்கல்லூரி, விஞ்ஞான ஆசிரியரும், பல விஞ்ஞானப் புத்தகங்களின் எழுத்தாளருமான தவசிதன் அவர்களின் வழிகாட்டலில் உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவர்களான ஏ. அஸ்வத் அகமட், எஸ். ஜெயந்தகுமார் ஏ.சி.எம் சமீர் ஆகியோரின் (7ம் பக்கம்)

aat
SRI LANKA
2013 ஜனவரி பரீட்சைகளுக்கான
மாணவர் பதிவுகள் தற்போது ஆரம்பம்
க.பொ.த. (சா/த) பரீசையில் 06 பாடங்களில் சித்தியெய்திய மற்றும் தற்பொழுது க.பொ.த (உ/த) கற்றுக் கொண்டிருக்கும் எந்தவொரு மாணவரும் பதிவுசெய்து கொள்ள முடியும்.
AAT பரீட்சைகள்


AL BUSINESS COLLEGE
VISIT US : 159 A, Sea View Road, Trincomalee. CALL US : 026 222 7622 / 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

**வணக்கம் !**

## வெள்ளுடை மாந்தரின் முரண்பாடுகள்

திருக்கோணமலைப் பொது வைத்திய சாலையில் வெள்ளுடை தரித்த மனிதக் கடவுளரிடையே முரண்பாடுகள் உருவாகி அவை உச்ச அளவிற்குச் சென்றுள்ளதைக் கடந்தவார நிகழ்வுகள் வெளிக்காட்டியுள்ளன.

அம் முரண்பாட்டின் உச்சக் கட்டமாக கடந்த வாரம் சிற்றூளிய வெள்ளுடைப் பணியாளர் ஒருவர் நீர்த்தாங்கியின் மீது ஏறி நின்று தீர்வின்றேல் தற்கொலை என்ற நிலைக்குச் சென்றுள்ளமையானது மிகக் கவலைப் படவேண்டிய கட்டத்தை முரண்பாடுகள் அடைந்துவிட்டன என்பதைக் காட்டி நிற்கின்றது.

இப் பந்தியின் தொடக்கத்திலேயே வெள்ளுடை தரித்த கடவுளர் என்று ஏன் நான் குறிப்பிட்டுள்ளேன் எனில் நோயுற்றுவரும் எவரையும் மனிதாபிமானத்தோடு தொடும் முதல் மனிதர்களாக இந்த வெள்ளுடை தரித்தவர்களே இருக்கின்றமை ஆகும். அவர்கள் தாதிய உத்தியோகத்தர்களாக இருந்தாலென்ன, சிற்றூழியர்களாக இருந்தால் என்ன எம்மைப் போன்ற நோயுற்றவர்களுக்கு இவ்விரு வகை வெள்ளுடை மாந்தரும் உதவினால் மட்டுமே நாம் அக் கட்டிடத் தொகுதியிலிருந்து மனிதர்களாக திரும்பி வர முடிகின்றது. எனவே உயிர் காக்கும் அவர்களைக் கடவுளர் என்று குறிப்பிடுவதிற் தவறுகள் ஏதுமில்லை.

அவ்வாறான மிகவுயர்ந்த பணியை ஆற்றும் இம்மாந்தரிடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருப்பின் அதனால் இறுதியிற் பலியாகப் போவது வறிய மக்களிற் பெரும்பாலானாரும் சில வசதி படைத்த மக்களும் தான். வேறு எவருமல்ல.

தற்கொலைக்கு முயற்சிக்கும் வரை இப் பிரச்சனை தலை யெடுத்துள்ளதெனில் அதன் பொறுப்பை முற்றுமுழுதாக ஏற்க வேண்டிய தார்மீகக் கடப்பாட்டை அவ் வைத்தியசாலையின் அத்தியட்சகரே கொண்டுள்ளார். அவரால் இப்பிரச்ச னையை முளையிலேயே கிள்ளி எறிய முடியாமற் போய்விட்டது என்பது கண்கூடு. ஏனெனில் இப் பிரச்சனை கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து நடந்துவருவதும் அதன் வெளிப் பாடுகளாக தாதிய உத்தியோகத்தர்கள் கடமைப் புறக்கணிப்புகளில் ஈடுபட்டதும் வெளி வந்த விடயங்களே.

புண்ணை மண் போட்டு ஒளித்து வைத்தால் மாறாது அதனை மருந்து போட்டுக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தெரியாமலா நிர்வாகம் இப் பிரச்சனைக்கான தற்காலிகத் தீர்வுகளைக் கடந்த காலங்களில் எடுத்து வந்திருக்கின்றது.

சரி இப்போது செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றிச் சிந்திப்போமானால் தவறு யாரிடமிருந்தது என்பதைச் சுரண்டிப் பார்க்காமல் இனித் தவறுகள் எழாமல் பணியாற்ற வேண்டும் என்பதை பேசுவது தான் தேவையானது. வறிய மனிதரின் பெயரால் நாம் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் தயவு செய்து...... பேசுங்கள்......!

-ஆசிரியர்-

## திருக்கோணமலை தேசிய கட்டிட நிர்மாணிகள் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல்



தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் திருகோணமலைக்கிளையினரால், வருட இறுதி ஒன்றுகூடல் டிசம்பர் 30ம்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணியளவில் வெல்கம் ஹொட்டலில் நடைபெற்றது. இதற்கு பிரதம விருந்தினராக கிழக்குமாகாண பிரதமசெயலாளர் திரு. டி.எம்.எஸ் அபயகுணவர்தன அவர்கள் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக கிழக்குமாகாண கட்டிடப்பணிப்பாளர், பொறியியலாளர் திரு.ஏ. வேல்மா ணிக்கம் அவர்கள் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வின்போது, பிரதம செயலாளர் கிழக்குமாகாண அபிவிருத்தி பற்றி விபரமாக ஒப்பந்தகாரர்களுக்கு விளக்கமளித்தார்.

அதனைத்தொடர்ந்து அவரது உரையில் கிழக்கு மாகாண ஒப்பந்தகாரர்களுக்கும், திணைக்கள உயர்அதிகாரிகளுக்கும் பயிற்சிப் பட்டறையொன்றை ஒன்றை உடனடியாக நடத்த வேண்டுமென சிபாரிசு செய்தார். அடுத்து, சிறப்பு விருந்தினர் பொறியியலாளர் திரு.ஏ. வேல்மாணிக்கம் அவர்கள் கட்டுமானப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) கட்டிட விதிமுறைகளை எல்லா திணைக்களங்களும் அமுல்படுத்தினால் ஒப்பந்தகாரர்களுக்கு இலகுவாக இருக்குமெனவும், ஒப்பந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சில சரத்தில் குறைந்த விலையைக் குறிப்பிடும் ஒப்பந்தகாரர்களுக்கு தான் வேலையை வழங்கவேண்டுமென்று இல்லை. எனவும் இங்கு வருகை தந்திருக்கும் அனைத்து பொறியிய லாளர்களும் இதை கவனத்தில் கொள்ளவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

குறைந்த விலைக்கு ஒப்பந்த ங்களை கொடுத்து தாங்கள் சில சிரமங்களை எதிர்கொண்டதாகவும் தரமான வேலையை அவர்களிடம் பெறமுடியாமல் போனதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் சங்கத்தின் செயலாளர் கேட்ட கேள்வி களுக்கு ஆக்கபூர்வமான பதில்களை வழங்கினார். இன்னும் பல கட்டிடத்துறை சார்ந்த நல்ல கருத்துக்களை எமது மாவட்ட ஒப்பந்தகாரர்களுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

(தீசன்)

## அணி நடையில் வென்றது ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலயம்

மாவட்டச் சாரணர் நிகழ்வில் இடம்பெற்ற அணி நடைப்போட்டியில் தம்பலகமம் ஆதி கோணேஸ்வரா பெண் சாரண அணியினர் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டின் இறுதியில் நிகழ்ந்த இந் நிகழ்வில் ஆதி கோணேஸ்வரா மகாவித்தியாலயப் பெண் அணியினர் சகல துறைகளிலும் தமது ஆற்றலை வெளிப்படுத்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் ஓர் அங்கமாக அவர்கள் கயிறிழுத்தல் போட்டியிலும் முதலாமிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.எஸ்.)



## பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக்களின் கூட்டம்

திருக்கோணமலைப் பிரதான காவல் துறைப் பணிமனையின் நிர்வாகத்தின் கீழ் அடங்கும் பதினெட்டு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உருவாக் கப்பட்டுள்ள காவல்துறை-பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக்களின் கூட்டமொன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை லிங்க நகரில் இடம்பெற்றது.

திருக்கோணமலை லிங்கநகர் கோணலிங்க வித்தியாலயத்தின் அதிபர் யோகானந்தம், குற்றத்தடுப்பு காவல்துறைப் பொறுப்பாளர் பரிசோதகர் திரு. அன்வர் உட்பட பொதுமக்கள் பாதுகாப்பு குழுக்களின் தலைவர்களும் அங்கத்தவர்களும் கலந்துகொண்ட இந் நிகழ்வினை பொதுமக்கள் பாதுகாப்புக் குழுவிற்கான காவல்துறைப் பொறுப்பதிகாரி எம்.எஸ் நிஹார் தலைமையேற்று நடாத்தியிருந்தார்.

## சிறைப் பாதுகாவலர்கள் மனித உரிமைகள் அறிவைக் கற்றனர் !

எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிறைக் காவலர்களுக்கான மனித உரிமைகள் அறிவூட்டல் செயற்பாடொன்று கடந்த வாரம் எகெட் கரித்தாஸ் அலுவலக கேட்போர் கூடத்தில் நிகழ்ந்தது.

திருக்கோணமலை மாவட்ட மனித உரிமைகள் இணைப்பாளர் பிரான்ஸிஸ் குலோரியா அவர்களால் இவ் வறிவூட்டல் கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

## கம்பளம் விரிக்கப்பட்ட வீதிகளால் போக்குவரத்து நெரிசல் குறைந்தது

திருமலை நகரின் மிகப்பிரதானமான போக்குவரத்துப் பாதைகளான கண்டிவீதி, துறைமுகவீதி என்பன கம்பள வீதியாக மாற்றம் பெற்றதை அடுத்து கடந்த மூன்று கிழமை களுக்கும் மேல் அவ் வீதிகளில் காணப்பட்ட வாகன நெரிசல் குறைவடைந்துள்ளது.

4ம் கட்டையிலிருந்து திருமலை துறைமுகம் வரையிலான நீண்ட வீதியை கம்பளம் இட்டு புனரமைப்புச் செய்யும் பணி கடந்த சில கிழமைகளாக இடம் பெற்று வந்தமையால் அவ்வீதிகளில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டு வந்தது. தற்போது வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டமையால் வாகனநெரிசல் குறைந்து சீரான போக்குவரத்து இடம் பெற்று வருகின்றதை காண முடிகின்றது.

இவ் வீதிகளில் போக்குவரத்துக் குறிகாட்டிகளை வரையும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிய வருகின்றது.

## வாழைநாரை பிரித்தெடுக்கும் இயந்திரம் அறிமுகம்

வாழை நாரைப் பிரித்தெடுக்கும் புதிய இயந்திரமொன்றை வென்ட்சர்ஸ் அலைவ் என்னும் நிறுவனம் திருமலையில் அறிமுகம் செய்துள்ளது.

இவ்வியந்திரத்தின் கொள்விலை ரூபா நானூறாயிரம் ஆகும். இவ் வியந்திரத்தைக் கொண்டு நாளொன்றுக்கு சுமார் 20 கிலோகிராம் நூலை பிரித்தெடுக்க முடியும் என அக் கம்பனியின் பேசவல்ல அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது படைப்புக்கள் உலகமயப்படுத்தப்படவேண்டும் ஒன்று கூடலில் — திருமலை நவம்

ஈழத்து இலக்கியப்பரப்பில் திருக்கோணமலை படைப்புக்கள் பாதுகாக்கப்படுவதோடு எமது படைப்புக்கள் உலகமயப் படுத்தப்படவும் வேண்டும் என திருக்கோணமலை மாவட்ட கலை இலக்கிய ஒன்றிய தலைவர் திருமலை நவம் தெரிவித்துள்ளார்.

நூல்தேட்டம் செல்வராஜா அவர்களுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை தி/மெதடிஸத் பெண்கள் கல்லூரியில் இடம் பெற்ற கலைஞர் ஒன்று கூடலில் தொடக்கவுரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் திருக்கோண மலையின் பெரும்பாலான படைப்புக்கள் இன்னும் வெளிவராத நிலையில் அழிந்துபோய்கொண்டிருக்கின்றன. எமது திருமலை மண் ஈழ இலக்கிய வரலாற்றில் தொன்று தொட்ட வரலாறு உடையது எனினும் முறையான ஆவணப்படுத்தல்களின்றி பெருமளவிலானவை அழிந்து போய்விட்டன இனியும் அந்நிலையை அனுமதிக்க முடியாது உலக அரங்கில் எமது படைப்புக்களை ஆவணப்படுத்தவேண்டும் என குறிப்பிட்டார்.

குறித்த இலக்கிய ஒன்று கூடலில் கிண்ணியா, மூதூர், கந்தளாய், திருக்கோணமலை பிரதேச கலை இலக்கியவாதிகள், கலைஞர்கள் எதிர்பார்த்ததைவிட பெருமளவு கலந்துகொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

(பவி)




# சமாந்தர ஈருருளிப் பயணம் வேண்டாம் !!!

நெரிசல் நிறைந்த நகராக திருமலை நகரம் மாறிவருவதை அடுத்து போக்குவரத்து காவல்துறையினர் போக்குவரத்து விதிகளை மேற்கொண்டுவருகின்றனர். இந்நிலையில் கடந்த காலங்களில் திருமலை நகர வீதிகளில் சமாந்தரமாக ஈருருளிகளில் சென்றவர்கள் காவல் துறையினரால் தடுத்து எச்சரிக்கப்பட்டதை காணக்கூடியதாய் இருந்தது. இதில் பெண் மாணவர்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

பெருமளவு தனியார் கல்வி நிலைய மாணவர்கள் மாலை நேர வகுப்புக்களிலிருந்து வீடு திரும்பும் போது சமாந்தரமாக வீதிகளில் ஈருருளிகளை செலுத்துகின்றனர்.

எனவே எமது பிரதேச பிள்ளைகளின் நலன்கருதி பெற்றோர், ஆசிரியர்கள், மற்றும் சமூகவாதிகள் மாணவர்களை நெறிப்படுத்துமாறு சம்பவத்தை நேரில் கண்டவர்கள் மலைமுரசுக்குத் தெரிவித்துள்ளனர்.

திரியாய் குன்றில் பயணித்துக் கொண்டு இருக்கும் நாம் திரியாய் குன்று தலமாக உருவாகுவதற்கு காரணமாக இருந்த பல்லவர்கள் யார் என்ற அறிமுகத்தையும் அவர்கள் இலங்கையில் இருந்துதான் சென்றார்கள் என்று ஆராய்ச்சியாளரான இராசநாயகம் நிரூபித்தையும் சென்ற வாரம் பார்த்தோம் .பல்லவர்களின் பூர்வீகம் ஆராய்ச்சிக்கு உரியதாக இருந்தாலும் அவர்களின் பிற்பட்ட செயல்பாடுகள் அவர்களது பண்டைய கல்வெட்டுக்கள் மூலம் மிக இலகுவாக ஆய்வாளர்களால் விளங்கி கொள்ள முடிகிறது.



நாம் கடந்த வாரம் சொன்னது போல இலங்கையில் குறிப்பாக திருகோணமலையில் பல்லவர்களுடைய செயல்பாடுகளை ஆராய்வதற்கு பல்லவர்களுடைய படைபலமே காரணமாக இருந்தது.

பல்லவர் மிகப்பலம் வாய்ந்த திறனுடைய படை வைத்தி ருந்தனர் என்பது அவர்கள் கதம்பர், சாளுக்கியர், கங்கர், இராட்டிரகூடர் போன்ற வட இந்திய மன்னர்களோடும், பாண்டிய சோழ, களப்பிரரோடும் போரிட்டதிலிருந்தே நமக்கு புரிகிறது.

அதிலும் இலங்கையின் மீது செல்வாக்கு செலுத்துவதற்கு பல்லவர் மிக வலிமையுடைய கடற்படை வைத்திருந்தனர் என்ற செய்தியை மாமல்லனாகிய நரசிம்மவர்மன் இலங்கை நாட்டு மன்னனான மானவன்மனுக்கு அரசுரிமை கிடைக்க ஈழத்தின் மீது படையெடுத்ததிலிருந்தும், நிருதுபங்கவர்மன் காலத்தில் சீமாறன் சீவல்லபன் என்ற பாண்டியன், பல்லவனின் கடற்படை கொண்டு ஈழத்தின் மீது படையெடுத்த திலிருந்தும் எம்மால் அறிய முடிகிறது.

படையெடுப்புக்கள் மாத்திரம் அன்றி தனது கப்பல் மூலம் இலங்கை ஊடான சீனா வியாபாரத்தை பல்லவர்கள் மேற்கொண்டனர்.

அவ்வாறு வந்த இரு பல்லவ வியாபாரிகள் திரியாய் குன்றில் ஒரு கோபுரத்தை நிர்மாணித்திருக்கின்றனர்.

இவ்வாறு எம் மண்ணில் செல்வாக்கு செலுத்தியவர்கள் பற்றி சில தகவல்களையாவது தெரியாமல் செல்வதால் நம் பயணம் முழுமை பெறாது என்று நினைக்கிறேன் ...அப்படித்தானே நீங்களும் ..

## பல்லவர் ஆட்சி முறை

பல்லவ நாடு பல இராட்டிரங்களாகப் (மண்டலங்களாக) பிரிக்கப்பட்டது. ஒவ்வோர் இராட்டிரமும் பல விடயங்களாகப் (கோட்டங்களாக) பிரிக்கப்பட்டிருந்தது. முண்டராட்டிரம், வெங்கோராட்டிரம் (வெங்கிராட்டிரம்), துண்டகராட்டிரம் (தொண்டை மண்டலம்) என்பன பல்லவர் பட்டயங்களில் குறிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பல்லவர் கோட்டம், நாடு, ஊர் போன்ற ஆட்சிப்பிரிவுகளை அமைத்தனர். நாட்டின் ஆட்சிக்குப் பொறுப்பாளர்கள் நாட்டார் என்றும் ஊரின் ஆட்சிக்குப் பொறுப்பானவர்கள் ஊரார் என்றும் அழைக்கப்பட்டனர்.

## மன்னர்

நாடாளும் பொறுப்பு முழுவதும் மன்னன் கைகளில் இருந்தது. அரசனாகும் உரிமை பரம்பரை வழி உரிமையாக வந்தது. சில சமயங்களில் மக்களே மன்னனைத் தேர்ந்தெடுத்தனர் என்பதை இரண்டாம் பரமேசுவரன் மகன் சித்திரமாயன் அரசனாக ஆவதற்குத் தகுதியற்றவன் எனக் கருதப்பட்டு, பல்லவ மன்னன் இரண்டாம் நந்தி வர்மன் என்ற பட்டப் பெயருடன் மன்னனாக ஆனதைக் குறிப்பிடலாம். பல்லவ மன்னர்கள் கல்வி, அறிவு, கலையறிவு, பண்பாடு, ஆட்சித்திறன், வீரம் ஆகியவற்றில் சிறப்புற்று விளங்கினர். சமயத்திலும் இறைவழிபாட்டிலும் பல்லவ மன்னர் அளவிலாத ஈடுபாடு கொண்டனர்.

## அரசு அலுவலர்கள்

பல்லவ மன்னர்களுக்கு ஆமாத்தியர்கள் என்ற அமைச்சர்கள் இருந்தனர் என்பதற்கும், அமைச்சர் குழு இருந்தது என்பதற்கும் சான்றுகள் கிடைக்கின்றன. இரண்டாம் நந்திவர்மனது தலைமை அமைச்சர் பிரம்மஸ்ரீ ராஜன், மூன்றாம் நந்திவர்மனது அமைச்சன் நண்பன் இறையூர் உடையன், தமிழ்ப்பேரரையன் என்ற அமைச்சர் பெயர்களால் தகுதியுடைய பிராமணர்களும் வேறு பெருமக்களும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர் என்று அறிகிறோம்.பல்லவ வேந்தர்களிடம் உள்படு கருமத்தலைவர், வாயில் கேட்பார், கீழ்வாயில் கேட்பார் போன்ற அதிகாரிகள் ஆட்சி நடத்த உதவி புரிந்தனர். பொற்கொல்லர், பட்டய எழுத்தாளர், காரணீகர் போன்றோர் அரண்மனை அலுவலராக விளங்கினர்.

## சின்னம்

பல்லவ வேந்தர் நந்தி இலச்சினையை கொண்டனர். சில பட்டயங்களில் சிங்கச் சின்னம் காணப்படுகின்றது. இச்சிங்கச்சின்னம் பட்டயங்கள் பல்லவ மன்னர்களால் போர்க்களங்களிலிருந்து விடப்பட்டவையாகும். பல்லவர் நாணயங்களிலும் நந்திச் சின்னம் பொறித்தனர்.

## நீதி

காஞ்சி போன்ற பெருநகரங்களில் நடைபெற்ற நீதிமன்றங்களுக்கு அதிகரணம் என்று பெயர் வழங்கப்பட்டது. அந்நீதிமன்றத் தலைவர்கள் -அதிகரண போசகர்- என்று அழைக்கப்பட்டார். சிற்றூரில் உள்ள நீதிமன்றங்கள் -கரணங்கள்- எனவும் அதன் தலைவர் -கரண அதிகாரிகள்- என்றும் அழைக்கப் பட்டனர். இவ்வதிகரணங்கள், குற்ற வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம் எனவும் -தருமாசனம்- எனப்படும் உயர்நீதிமன்றம் அரசனது நேரான மேற்பார்வையில் பிற வழக்குகளை விசாரிக்கும் எனவும் ஒருவாறு உணரலாம். சிற்றூர்களில் இருந்த அரங்கூர் அவையத்தார் வழக்குகளை ஆட்சி(அநுபோக பாத்தியர்), ஆவணம் (எழுத்து மூலமான சான்றுகள்), அயலார் காட்சி, கண்டார் கூறு ஆகிய சான்றுகளின் அடிப்படையில் விசாரித்து முடிவு கூறினர்.

இன்னும் நடுவோம்....




(கா.செந்தூரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாக்க வெற்றியில் புனித சூசையப்பர் கல்லூரி

கடந்த ஆண்டு நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான புத்தாக்கத்திறன் போட்டியில் தி/புனித சூசையப்பர் கல்லூரி தேசிய ரீதியில் முதலாமிடத்தை பெற்றுள்ளது. "சுமைதூக்கலில் மனிதப் பாதுகாப்பு" எனும் தொழில் நுட்பத்திற்காகவும், செயற்பாட்டை இலகுபடுத்தல் என்னும் தொழில் நுட்பத்திற்காகவும் உருவாக்கப்பட்ட புத்தாக்க கருவிகளுக்காக தேசிய விருதும், சான்றிதழ்களும், கேடயங்களும் தங்கப் பதக்கங்களும் என விருதுக் குவியல்களோடு கழிப்புற்று நின்ற அக்கல்லூரியின் பௌதீகவியல் ஆசிரியர். திரு.எம்.பி.தவசிதன் அவர்களுடனும் செல்வன்.ஏ.அஸ்வக் அஹமட், செல்வன்.எஸ்.ஜெயந்த குமார், செல்வன்.எ.சீ.எம்.சமீர் ஆகியோர் மலைமுரசிற்கு வழங்கிய பிரத்தியேக பேட்டி வருமாறு.

இப்புத்தாக்கக் கருவியினை உருவாக்க வழிகாட்டியாக திகழ்ந்த பௌதீகவியல் ஆசிரியர் திரு.தவசிதன் கூறுகையில் "இக்கருவி மனித வேலைகளை இலகுபடுத்துவதற்காக" உருவாக்கப்பட்டது. இதன் சிறப்பு யாதெனில் இந்த ஒரு கருவியை பல்வேறுபட்ட தேவைகளுக்கு பயன்படுத்தமுடியும். உதாரணமாக தலையில் சுமை ஏற்றல், முதுகில் சுமை ஏற்றலில் இருந்து வீடு கழுவுவதுவரை பல்வேறு தேவைகளுக்கு இது பயன் படுத்தப்படும். நாங்கள் வெறுமனே வெறும் பிளாஸ்டிக் குழாய்களை கொண்டு இவற்றை வடிவமைத்தோம். உண்மையில் பாரம் குறைந்த உலோகத்தை பயன்படுத்தி இதை அமைக்கமுடியும். எமது இக்கருவி திருக்கோணமலை வலயமட்டத்தில் 2ம் இடத்தையே பெற்றது எனினும் எமது விடா முயற்சியால் தேசிய ரீதியில் நாம் முதலாமிடத்தை பெற்றிருக்கிறோம். உண்மையில் இப் புத்தாக்கப் போட்டியில் கலந்துகொள்ள எம்மை ஊக்கப்படுத்தியது உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.சுதாகரன் அவர்கள் தான். அவருக்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளதோடு எமக்கு ஆதரவளித்த கல்லூரி அதிபர் அருட்தந்தை பொன்ஷியன் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். மேலும் எமது பாடசாலையில் எமக்கு ஊக்கமளித்த என் சக ஆசிரியர்களுக்கும், திருக்கோணமலை கல்வி வலயத்திற்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆரம்பத்தில் மாணவர்கள் இதுபற்றி அக்கறை கொண்டிருக்க வில்லை எனினும் எனது நெருக்குதல் களால் பணியை சிறப்பாக நிறைவேற்றி உள்ளனர். அவர்களின் பெற்றோர்களின் ஒத்துழைப்பும் எமக்கு மேலதிகமாக கிடைத்ததை இட்டு நான் மகிழ்வடைகிறேன். இவர்கள் இக்கருவியின் தொழில்நுட்பத்திற்காக இரு விருதுகளை சுவீகரித்துள்ளனர். செயற்பாட்டை இலகுபடுத்தல் சம்மந்தமான தொழில்நுட்பத்திற்காக 25000 ரூபாவும் முதலாம் இடம் பெற்றமைக்காகவும் சுமை தூக்கலில் மனித பாதுகாப்பு எனும் தொழில் நுட்பத்திற்காக 100,000 ரூபாவும் பெற்றதோடு விருதுகளையும், பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.




இது எமது ஆரம்பம் என்றுதான் கருதுகிறேன் இன்னும் விஞ்ஞான, அறிவியல் துறைகளில் எமது மாணவர்கள் குறிப்பாக தமிழ் பேசக்கூடிய மாணவர்கள் பல தேசிய சாதனைகளை ஏற்படுத்த வேண்டும் அதற்கு என்னாலான முழு ஒத்துழைப்பையும் வழங்க நான் காத்திருக்கிறேன். அத்தோடு எமது பாடசாலையின் புத்தாக்க மன்ற செயற்பாடுகளை துரிதப்படுத்தவும் எண்ணியிருக்கின்றேன். என இப்புத்தாக்கவெற்றியின் வழிகாட்டி திரு.தவசிதன் அவர்கள் தெரிவித்தார்.

மாணவர்கள் கருத்து தெரிவிக்கும் போது, உண்மையில் திரு.தவசிதன் ஆசிரியர் இல்லாவிட்டால் இச்சாதனையை எம்மால் செய்திருக்க முடியாது ஆசிரியரின் விடா முயற்சியின் விளைவே எமதான இவ்வெற்றி ஏற்கனவே கல்வித் துறைக்குப் பல உதவிகளை செய்துவரும் எமது ஆசிரியர் தனிப்பட்ட ரீதியிலும் எமக்கு பல சலுகைகளை வழங்கினார். ஏன் இதற்காக அவரிடம் சிறு அடிகளையும் ஏச்சுக்களையும் கூட பெற்றோம் இன்று அவற்றை நினைக்கும் போது பெரு மகிழ்ச்சியாக உள்ளது.

பலதடவை தனது கல்வி நிலையத்தை கூட எமக்காக தந்துதவினார். அவருக்கு நாங்கள் நன்றி சொல்லுகின்றோம். அத்தோடு எமது ஏனைய ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை சமூகம், திருமலை கல்வி வலயம் போன்வற்றுக்கும் எல்லாவற்றிலும் சிறப்பாய் திரு.எஸ்.சுதாகரன் உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கும் எமது நன்றிகள்.எமது இக்கருவியோடு கொழும்பில் இடம்பெற்ற போட்டியில் கலந்துகொண்ட போது நாம் உண்மையாகவே பயந்துபோனோம். ஏனைய மாணவர்கள் கணினி சம்மந்தமான பெரிய கருவிகளோடு வந்திருந்தார்கள் நாங்கள் குழாய்களோடு போயிக்கிறோம் என்று ஆனால் இன்று எமக்கு கிடைக்கின்ற பாராட்டுக்கள் எம்மை மலைக்கச் செய்கின்றன. இதில் வெற்றி பெற்றமைக்காக எமக்கு பாராட்டு வைபவங்களை ஒழுங்கு செய்திருந்தார்கள் அவர்கள் அனைவருக்கும் எம்மை இன்றும் பாராட்டிய வண்ணமிருக்கும் எமது ஆசிரியர்களையும், சமூகத்தவரையும் நன்றி கூர்ந்துபார்க்கிறோம். இவ் வெற்றிக்காக எமக்கு மொத்தமாக 125,000 ரூபா பரிசுத் தொகையாக கிடைத்தது. இதில் 15,000 ரூபாவை பாடசாலை புத்தாக்க கழகத்தின் அபிவிருத்தி நிதிக்காக வழங்குகின்றோம். இதுபோல் எமது பாடசாலை பல வெற்றிகளை பெற வேண்டும் என்பது எமது ஆசையாய் உள்ளது. என செல்வன்.ஏ.அஸ்வக் அஹமட், செல்வன்.எஸ்.ஜெயந்தகுமார், செல்வன்.எ.சீ.எம்.சமீர் ஆகியோர் கலந்துதெரிவித்திருந்தனர்.

திருக்கோணமலைக்கு அகில இலங்கை ரீதியில் அடையாளத்தை ஏற்படுத்திக்கொடுத்திருக்கும் தி/புனித சூசையப்பர் கல்லூரிக்கும் அப் புத்தாக்க உருவாக்கலில் ஈடுபட்ட மாணவர் களுக்கும் அதனை நெறிப்படுத்திய பௌதீகவியல் ஆசிரியர் திரு.தவசிதன் அவர்களுக்கும் இவர்களுக்கு மேலான ஒத்துழைப்பை வழங்கிய திருக் கோணமலை கல்வி வலயத்துக்கும் மலைமுரசு தன் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கிறது.

நேர்வும் - தொகுப்பும்
தில்லைநாதன் பவித்ரன்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் எழுந்து நிற்கும் தமிழரின் தலை விதிக் கேள்வி - எவ்வாறு ?

- மாயன் -

இன்றைய பார்வையில் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்கொள்ளும் வெளிநாட்டுச் சவால்களில் முக்கியமான தொன்றைப் பற்றிப் பார்க்கலாம்.

வெளிநாட்டில் இருந்து எழும் சவால்களில் மிக முக்கியமானதும் காத்திரமானதுமான சவாலாக நாம் கருத வேண்டியது இந்திய அரசையும் அவ்வரசின் இலங்கைத் தமிழர் மீதான பார்வையையும் தான்.

தொன்று தொட்டே இலங்கைத் தமிழரின் விடயத்தில் இந்திய அரசின் போக்கு சாதகமான மனநிலையில் இல்லை என்பதே உண்மை. இதனை நாம் பலநூற்றாண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுக் காலம் முதல் என்ன நிகழ்ந்தது என்பதைப் பார்த்தாலே புரிந்து கொள்ள முடியும்.

சேர, சோழ, பாண்டிய, பல்லவ இராச்சியங்கள் இலங்கைத் தமிழரின் பூர்வீக நிலப் பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததை நாம் அறிய முடியும். அதாவது எப்போதுமே எம்முடன் அவர்கள் பங்காளிகளாக வரவிருப்பின்றியிருந்தமையையும், எம்மை அடிமைத் தளைக்குள்ளாக்கியே இருந்தமையையும் நாம் காண முடிகின்றது. இக் கூற்றானது கிட்டத்தட்ட கி.பி 4ம் நூற்றாண்டிற்குப் பிறகே மிகப் பொருந்துகின்றது. ஆனாலும் கி.மு 15000 நூற்றாண்டுகளுக்கு முன்னரே பாடப்பட்டதாகக் கருதப்படும் இராமாணயத்திலேயே இலங்கைத் தமிழ் அரசன் இராவணன் ஓர் அரக்கனாக சித்தரிக்கப்பட்டிருப்பது அக்காலத்தில் இருந்தே இலங்கைத் தமிழர்கள் கைப்பற்றப்பட வேண்டியவர்கள் என்ற மனோநிலையை இந்தியப் பெரும் பான்மை அரசிற்கு காலங்காலமாக உருவாக்கியிருக்கின்றமையை புரிந்து கொள்ள முடியும்.

தொடர்ந்து இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த விஜயனின் மனோநிலையை நாம் இன்றும் அனுபவிக்கின்றோம் தானே! எனவே இந்திய மனோநிலை என்பதை தெள்ளத் தெளிவாக விளங்கிக் கொண்டே அதன் ஊடாக தமிழ் மக்களிற்கான தீர்வை எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறுவடை செய்யப் போகின்றது என்பதையே சிந்திக்க வேண்டிய நிலை இருக்கின்றது.

அவ்வாறாயின் இந்தியாவை விடுத்து ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்க்கான பிரச்சனைத் தீர்வை எட்ட முடியாதா என்ற கேள் எழலாம். அதற்கான விடை கசப்பானதே.

ஆம்! தற்போதும் ஆதிக்கச் சிந்தனையுடன் தனது நலன்களுக்காக எம்மைப் பலியாக்கும் இந்தியாவை விடுத்து இலங்கைத் தமிழர் தீர்வு நோக்கி நகர முடியாமலிருப்பதற்கு இரு காரணங்கள் உள்ளன.

அதன் முதற் காரணம் இந்தியாவின் தமிழ்நாடே!

ஏனெனில் இந்தியத் தமிழருக்கும் இலங்கைத் தமிழருக்கும் உள்ள பூர்வீகத் தொடர்பாகத் தமிழ் நாடே உள்ளது. அதனால் கோடிக்கணக்கான இந்தியத் தமிழர்களைத் தாண்டி இலங்கைத் தமிழர்கள் நன்மையொன்றைப் பெற்றுக்கொள்வது சாத்தியமேயில்லை. ஆனால் அவ் இந்தியத் தமிழர்கள் இந்திய அரசினை கட்டுப்படுத்தும் வல்மையைக் கொண்டமையும் போது மட்டும் தான் அதன் தாக்கம் தமிழருக்குச் சார்பானதாய் அமையும் ஆ. தில்லைவிடில் இறுதிப்போரின் போது அழிந்த மக்களைக் காப்பாற்ற முடியாமலிருந்ததைப் போலவே இந்தியத் தமிழரின் செல்வாக்கு இலங்கைத் தமிழரின் பிரச்சனைத் தீர்வில் இருக்கும்.

இரண்டாவது காரணம் இந்தியா ஆசியக் கண்டத்தின் முக்கிய வல்லரசுப் பண்புகளைக் கொண்டமையும் சனனாயக நாடாகும். இவ்வாறு இருப்பதால்தான் மேற்குலகின் சனனாயக நாடுகள் இலங்கைக்குள் வருவதற்கு இந்திய நாட்டைப் பயன்படுத்தியே தீரவேண்டிய சூழலல் இருக்கின்றன. இங்கு ஏன் சீனாவை ஏனைய நாடுகள் கருத்திற் கொள்வதில்லை என்றால் அவை அந்நாடு இராணுவ ஆட்சியின் கீழுள்ள சனனாயக நாடாக இருப்பதுடன் ஆதிக்க வெறியுடன் திபெத்தை ஆளுகைக்கு உட்படுத்தியிருப்பதும் ஆகும்.

இவ்விரு காரணங்களாலும் இந்தியாவைத் தவிர்த்து ஈழத்தமிழருக்கான தீர்வினைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட முடியாததால் இந்தியா தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பெரும் சவாலாக அமைகிறது. அடுத்த வாரம் பேசுவோம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முரசின் உலக வலம்

## அமெரிக்காவில் ஆயுதக் கட்டுப்பாட்டு முன்மொழிவுகள் – ஒபாமா நடவடிக்கை –

-எம்மிடையேயுள்ள மிகவும் தாக்கப் படத் தக்க மக்களைக் காக்க வேண்டுமாயின் நாம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என தனது ஆயுதத் தடை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள அமெரிக்க சனாதிபதி பராக் ஒபாமா அமெரிக்காவின் ஆயுதக் கட்டுப்பாடு முறைகளுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளார்.

அவற்றுள் இராணுவ தாக்குதல் துப்பாக்கிகளை உள்ளூர்ப் பாவனைக்குத் தடை செய்தல், ஆகக் கூடியது 10 ரவைகளைக் கொண்ட ரவைக்கூடுகளை மட்டும் விற்பனை செய்தல், கவசங்களைத் துளைக்கும் துப்பாக்கி ரவைகளின் விற்பனையைத் தடை செய்தல், ஆயுதக் கடத்தல் தடைக்கான புதிய சட்ட விதிகளை உருவாக்குதல் மற்றும் குடிவகை, போதைப் பொருள், ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கட்டுப்பாட்டாளர் ஒருவரை நியமனஞ் செய்தல் என்பவை உள்ளடங்கியுள்ளன.

## ஜெர்மனியத் தங்கங்கள் வீடு திரும்புகின்றன!

அமெரிக்காவின் நியுயோர்க்கிலும், பிரான்ஸின் பாரிசிலும் சேமித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 700 தொன் தங்கங்களை ஜேர்மனியின் மத்திய வங்கி மீளப் பெற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது.

தற்போது தனது தங்கச் சேமிப்பில் மூன்றில் ஒரு பகுதியைத் தமது நாட்டில் வைத்திருக்கும் ஜேர்மனி 2020ம் ஆண்டில் தனது தங்கச் சேமிப்பின் அரைப்பகுதியை தனது நாட்டுக்குள் சேமிக்கத் திட்டமிட்டுள்ளது.

சோவியத் யூனியன் தனது நாட்டுக்குள் ஊடுருவி விடலாம் என்ற சந்தேகத்தால் இந்தத் தங்க இருப்புக்கள் இவ்விரு நாடுகளிலும் ஜேர்மனியால் பாதுகாப்பாக சேமித்து வைக்கப் பட்டிருந்தன.

நியுயோர்க்கிலுள்ள தங்கத்தின் 45 வீதத்தையும், பிரான்ஸிலுள்ள தங்கத்தின் 37 வீதத்தையும் ஜேர்மனி மீளப் பெறவுள்ளது.

## பிரான்ஸியப் படையின் முயற்சி தோற்றது பணயக்கைதி கொல்லப்பட்டார்

சோமாலிய ஆயுததாரிகளிடம் சிக்கியுள்ள பிரான்சியர் ஒருவரை மீட்க மேற்கொள்ளப்பட்ட பணயக் கைதி விடுவிப்பு நடவடிக்கை தோல்வியில் முடிந்ததன் பின்னர் அப் பணயக் கைதி கொல்லப்பட்டதாக அறிவித்தல் வெளியாகியுள்ளது.

சோமாலிய ஆயுததாரிகளால் இக் கொலை நிகழ்த்தப்பட்டதாக அவர்களின் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் இராணுவத்தின் மீட்புத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாகவே இக்கொலை நிகழ்த்தப்பட்டதாக அவர்களது செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது.

## –இந்தியாவில் தொடரும் வன்புணர்ச்சி– ஏழு ஆண்கள் பஞ்சாப்பில் கைது

உலகத்தையே உலுக்கிய டெல்லி வன்புணர்ச்சி செய்தி தணியும் முன்னர் அதே மாதிரியான மற்றோர் வன்புணர்வு பஞ்சாப் மாநிலத்தின் குர்தாஸ்பூர் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது.

பேரூந்துத் தரிப்பிடத்திலிருந்து பேரூந்தினுள் ஏறிய பெண் ஒருவரை அப் பேரூந்திலிருந்து ஏழு ஆண்கள் வன்புணர்வுக்குள்ளாக்கியுள்ளதாக பஞ்சாப் காவல்துறை அறிவித்துள்ளது. பெண் தனியாக பேரூந்திலுள்ளதை அவதானித்த பேரூந்து ஓட்டுனரும் உதவியாளரும் ஆளரவமற்ற இடத்திற்கு பேரூந்தைச் செலுத்தியுள்ளனர். இடைநடுவில் மேலும் ஐந்து ஆண்கள் அவர்களுடன் இணைந்து கொள்ளவே அன்றைய இரவு முழுவதும் அப் பெண்ணை ஏழு பேரும் வன்புணர்வுக்குள்ளாக்கியுள்ளனர்.

மறுநாட் காலையிலேயே அப் பெண்ணைப் பேரூந்துத் தரிப்பிடத்தில் இறக்கிச் சென்றுள்ளனர் எனத் தெரிய வருகின்றது. அதைத் தொடர்ந்து காவல்த்துறையால் கைது செய்யப்பட்டனர்.

## – திபெத்திய சுதந்திர தாகம் – தன்னைத் தீயில் கருக்கினார் திபெத்திய இளைஞர்

சீன ஆதிக்கத்திற்கு எதிரான சுதந்திர உணர்வை உலகிற்குத் தெரியப்படுத்தவென தனது உடலில் தீமூட்டி திபெத்திய இளைஞர் ஒருவர் தற்கொடையாளியானார்.

இவ்வாண்டின் முதற் தற்கொடையாளியாக திபெத்திய பீட பூமியல் பதிவாகியுள்ளார் இவர். நியாயமான சுதந்திரத்தைக் கோரிப் போராடி வரும் திபெத்தில் தற்கொடையாகும் இளைஞர் யுவதிகளின் அளவு மிக அதிகமாக உள்ளதாக சர்வதேசச் செய்திச் சேவைகள் தெரிவிக்கின்றன.

1950ம் ஆண்டில் சுதந்திரத் தனி நாடான திபெத்தினை சீனா தனது ஆளுகைக்குள் எடுத்துக் கொண்டது. அதனைத் தொடர்ந்து 1959ல் திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா இந்தியாவிற்குத் தப்பிச் சென்றார்.

2009ல் திபெத்திய விடுதலைக்காகத் தனதுயிரை திபெத்திய பிக்கு ஒருவர் தற்கொடை செய்ததைத் தொடர்ந்து திபெத்தில் தற்கொடைப் போர் நிகழத் தொடங்கியுள்ளது.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 02

பிரதீபா

1. கீழ்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கும் எழுத்துக்களைக் கொண்ட விடையை கோடிடுக.
   - அ. தேசிய கீதம் இசைக்கப்பட்டது.
   - ஆ. இசைக்குழுவினர் பிரதமவிருந்தினர்களை அழைத்துவந்தனர்.
   - இ. தேசிய கொடி உயர்த்தப்பட்டது.
   - ஈ. பாடசாலைக் கொடி உயர்த்தப்பட்டது.
   - உ. பிரதம விருந்தினர்களால் மங்கள விளக்கு ஏற்றப்பட்டது.
   - ஊ. பாடசாலை கீதம் இசைக்கப்பட்டது.

   1. அஆஇஈஉஊ 2. ஆஇஅஈஊஉ 3. ஆஇஈஅஊஉ

2. பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் வினாவிற்கு விடை தருக.

   மாறும் சுற்றுச் சூழ்நிலையில்
   மாசுகள் செய்து கெடுக்காமல்
   போற்றும் ........................ அழிக்காமல்
   பேணிக் காப்பது கடமை என்போம்

   பாடலின் இடைவெளியில் வரவேண்டிய சொல்லைத் தெரிக.

   1. பொதுச் சொத்து 2. மரங்கள் 3. தனியார் உடமை

3. முதல் எழுத்து காட்சியிலுண்டு கட்சியில் இல்லை. இரண்டாம் எழுத்து மணத்தில் இல்லை. மனத்தில் உண்டு. இறுதி எழுத்து கம்பியிலுண்டு கப்பியிலில்லை. நான்கு எழுத்துக்களைக் கொண்ட அச்சொல் எது?

   1. கானகம் 2. கட்டம் 3. கனகம்

4. பின்வருவனவற்றில் புரதமிக்க உணவு எது?

   1. கீரை 2. பசளி 3. சோயா

5. கண்டமாலை நோய்க்கு பிரதான காரணம் எது?

   1. விற்றமீன் குறைபாடு 2. கல்சியம் குறைபாடு 3. அயடீன் குறைபாடு

6. இலங்கை மக்களின் பிரதானமான உணவு அரிசிச் சோறு. இலங்கையில் அதிகளவு நெல் விளையும் மாவட்டம் எது?

   1. குருநாகல் 2. மட்டக்களப்பு 3. அம்பாறை

7. மருத்துவரினால் நோயாளிக்கு விதிக்கப்படும் மருந்தை குடிக்க முன்பு கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயம்?

   1. மருந்தை உற்பத்தி செய்த நாடு
   2. மருந்தில் அடங்கியுள்ளவை
   3. ஒரு வேளை குடிக்க வேண்டிய அளவு

8. கறி சமைக்கும்போது எலுமிச்சைப்புளி சேர்ப்பதற்கு பொருத்தமான சந்தர்ப்பம்?

   1. அடுப்பிலிருந்து இறக்கியவுடன் 2. அடுப்பில் கறி இருக்கும் வேளையில் 3. அடுப்பில் இருந்து இறக்கி ஆறிய பின்.

**கீழ்வரும் தகவலை வாசித்து 9, 10 ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

பிரதான பாதையொன்றில் குறித்த 3 மணித்தியாலங்களில் பயணம் செய்த வாகனங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| காலம் | கார் | மோ.சைக்கிள் | துவிசக்கரவண்டி |
|---|---|---|---|
| 1வது மணித்தியாலம் | 12 | 17 | 7 |
| 2வது மணித்தியாலம் | 10 | 15 | 12 |
| 3வது மணித்தியாலம் | 16 | 16 | 13 |

9. எவ்வாகனம் மொத்தமாக மூன்று மணித்தியாலங்களிலும் அதிகமாக பயணம் செய்தது?

   1. கார் 2. மோ.சைக்கிள் 3. துவிச்சக்கரவண்டி

10. ஒவ்வொரு மணித்தியாலத்திலும் அதிகமாக சென்ற வாகனத்தின் மொத்த எண்ணிக்கை யாது? 1. 38 2. 48 3. 32

11. 1மீற்றரில் எத்தனை மில்லிமீற்றர் உண்டு?

    1. 100 2. 1000 10

12. ஒரு புத்தகத்தின் விலை ஒரு பென்சிலின் விலையின் இரு மடங்காகும். ரூபா 36 இற்கு 1 புத்தகமும், 1 பென்சிலும் வாங்கலாம் எனின், அவற்றின் விலைகள் முறையே? 1. ரூ 24, ரூ 12 2. ரூ 12, ரூ 24 3. ரூ 8, ரூ 16

**தகவலை வாசித்து 11, 12, 13 ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

ஓர் வட்ட வடிவமான மேசையைச் சுற்றிவர புவனா, ஜீவா, தேவா, அமீன், ஆமினா, ராமு ஆகியோர் அமர்ந்துள்ளனர். அமீனுக்கு இடது கைப்புறமாக இரண்டாவது கதிரையில் ராமு உள்ளான். தேவாவுக்கு வலது கைப்புறமாக மூன்றாவதாக ஜீவா உள்ளான். தேவாவுக்கும் அமீனுக்கும் இடையே புவனா உள்ளான்.

11. அமீனுக்கு எதிரே அமர்ந்திருப்பவர் யார்?

    1. ஆமினா 2. ராமு 3. தேவா

12. ராமுவுக்கு வலது கைப்புறம் இருப்பவர் யார்?

    1. ஜீவா 2. ஆமினா 3. தேவா

13. ஆமினாவும், ராமுவும் இடம் மாறி அமர்ந்தால், ஆமினாவுக்கு வலது கைப்புறமாக இருப்பவர் யார்?

    1. புவனா 2. ஜீவா 3. ராமு

பெயர்: ......................................................................
......................................................................
முகவரி: ......................................................................
......................................................................
......................................................................
பாடசாலை: ......................................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, தபால்முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இணையத்தில் கலைச் சொல்லாக்கம்

## 27.12.2009ல் நடந்த தேசிய இலக்கியப் பேரவையின் ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை

சென்ற வாரத் தொடர்ச்சி

மயூரன்

இணையத்தமிழ்ச்சமூகம் அதன் ஆரம்பகட்டங்களில் தொழின்முறையில் கணினியோடு உறவுள்ளவர்களையே பெருமளவில் கொண்டிருந்தமை விளங்கிக்கொள்ளப்படத்தக்கதே. இதன் காரணமாக அங்கே எடுக்கப்பட்ட கலைச்சொல்லாக்க முயற்சிகளும் கணினித் துறைசார்ந்த கலைச்சொல்லாக்கமாகவே ஆரம்பத்தில் அமைந்தமை இயல்பானதே. 1997 இல் இடம்பெற்ற தமிழ் இணைய மாநாடு கணினியில் தமிழைப் பயன்படுத்துவது குறித்து அக்கறைப்பட்டிருந்தது. அங்கே கலைச்சொல்லாக்கம் பற்றிய கட்டுரைகள், உரையாடல்கள் இடம்பெற்றதாகப் பதிவுகளில் இல்லை. ஆனால் 98, 99, 2000ம் ஆண்டுகளின் தமிழ் இணைய மாநாடு கலைச்சொல்லாக்கத்திற்கு பெரும் முக்கியத்துவம் வழங்கியிருந்தது. கலைச்சொல் அகரமுதலி ஆக்கம் பன்னாட்டுத் தமிழ் அறிஞர்களது கூட்டுழைப்பில் உருவாகவேண்டும் என்கிற எண்ணக்கருவினைச் சாத்தியப்படுத்தியதும் அதற்கான அழுத்தத்தைக் கொடுத்ததும் இணையத்தமிழ்ச்சமூகமும் தமிழ் இணைய மாநாடும் தான் என்பதை இலங்கை அரசகரும மொழிகள் திணைக்களம் வெளியிட்ட, இலங்கை, தமிழ்நாட்டுத் தமிழறிஞர்களின் கூட்டுழைப்பில் உருவான தகவற்தொழிநுட்ப அகரமுதலியின் முகவுரையில் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் வார்த்தைகளில் தெரிந்துகொள்ளலாம்.

■ தமிழ்நாட்டினதும் இலங்கையினதும் அறிஞர்களின் இணைவு முயற்சியினடியாக வெளிவரும் முதலாவது கலைச்சொல் வெளியீடு இது என்ற வகையில் இதற்கு மிகவும் முக்கியமான ஒரு இடமுண்டு. கடந்த நூற்றாண்டின் பின்னரைக்காலம் முதல் இத்தகைய ஒருங்கிணைப்பு முயற்சி நடைபெறல் வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு வந்துள்ளது

அதே அகரமுதலியின் முன்னுரையில் சு. சிவதாசன் கூறுகிறார்,

■ தமிழ்நாடு ஒரு கலைச்சொல் அகரமுதலியை உருவாக்கி இரண்டாவது தமிழ் இணையச் சர்வதேச மாநாட்டில் பங்குபற்றியோருக்கு வழங்கியது. அவ்வகராதியில் 4102 சொற்கள் இடம்பெற்றன. தமிழ் இணையம் 2000 கொழும்பில் நடத்த இருந்த மூன்றாவது சர்வதேச மாநாட்டுக்கு ஆயத்தங்கள் செய்யும்போது, ஒரு புதிய விரிவாக்கப்பட்ட கலைச்சொல் அகரமுதலியை மாற்றங்களோடும் புதுப்புனைவுகளோடும் செய்ய ஏற்பாடாகியிருந்தது. இப்புதிய கலைச்சொல் அகரமுதலி சிங்கப்பூரில் நடைபெறும் தமிழ் இன்டர்நெட் 2000 ஆகிய மாநாட்டில் இலங்கையால் கையளிக்கப்படுகின்றது

இவர்களது கூற்றுக்கள் எடுத்துக்காட்டும் புதிய மாற்றம், இலங்கை, புலம்பெயர், இந்திய, சிங்கப்பூர், மலேசிய தமிழ் அறிஞர்களது கூட்டுழைப்பில் கலைச்சொல்லாக்க முயற்சிகள் இடம்பெறத்தொடங்கியதன், அதற்கான அழுத்தத்தினை இணையத்தின் வரவுடனான புதிய தொடர்பாடற்சூழலின் ஆரம்ப நிலையாகும்.

இதற்குப்பின்னரான காலங்களில் கணினி, இணையத் தொழில்நுட்பங்கள் பல புதிய மாற்றங்களைச் சந்திக்கின்றன. இணையப்பயன்பாடு பரவலாகின்றது. கணினியில், இணையத்தில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதில் இருந்த தொழில்நுட்பச்சிக்கல்கள் பெருமளவில் களையப்படுகின்றன. இணையத் தமிழ்க் குடிமக்களின் அளவு பெருகுகிறது. இணைய வேகம் அதிகரிக்கிறது. இதன் காரணமாக குறித்த நேரத்தில் இணையத்தினூடாகப் பரிமாறத்தக்க தகவல்களின் அளவு பெருக்கமடைகிறது. இணையத்தில் தொடர்பாடி முடிவுகள் எடுக்கப்பட்டு, அறிஞர்கள் தரையில் கூடி கலைச்சொற்களையாக்கும் காலம் மெல்ல மாறி இணையத்தை அடிப்படையாகக் கொண்ட மென்பொருட்களின் உதவியுடன் கலைச்சொல்லாக்கத்தினைச்செய்யக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகத்தொடங்கின.

இக்காலகட்டத்தில் தான் -கட்டற்ற மென்பொருள்- இயக்கமும் அதன் தத்துவங்களும் தமிழ்ச்சூழலுக்கு அறிமுகமாகின்றன. திறந்த மூலமாக அமையும் கட்டற்ற மென்பொருட்களை உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த தமிழ்க் கணிமையாளர்களும் புதிதாக வந்து சேர்ந்த கணிமையாளர்களும் லினக்ஸ் இயங்குதளம் உள்ளிட்ட கட்டற்ற மென்பொருட்களில் தமிழுக்கான ஆதரவினை ஏற்படுத்தவும் அவற்றை தமிழாக்கம் செய்து தமிழ் இடைமுகப்புடன் உருவாக்கவும் முயற்சிகளை மேற்கொள்ளலாயினர்.

இணையத்தில் தமிழ்க் கலைச்சொல்லாக்கம் பற்றி 2009ம் ஆண்டில் கதைக்கும் போது குறிப்பிடாமல் தாண்டிப்போகவே முடியாத மிக மிக முக்கியமான மாற்றமொன்றினை இந்தத் தமிழ்க் கட்டற்ற மென்பொருள் இயக்கம் தான் இணையச்சூழலில் உருவாக்கியது.

(அடுத்த வாரம் முடியும்)

# வெற்றிப் பாதையின் வழியே …..நீ…….

அனைவருக்கும் உள்ள பொதுவான ஒரு எண்ணம் நான் சாதிக்க வேண்டும், நான் வெற்றிபெறவேண்டும் என்பது தான்.

ஆனால் எண்ணமாக மட்டும் நினைப்பவர்களும் உண்டு, அதனை உண்மையாக உணர்த்துபவர்களும் உண்டு.


நாம் சற்று சிந்தித்துப் பார்த்தால் வெற்றி பெற்றவர்களும் சாதித்தவர்களும் தமக்கென்று ஒரு பாணியை வைத்திருப்பார்கள். ஆனால் அவர்கள் கடந்து வந்த பாதை ஒரே மாதிரியானது. இவை அனைத்துமே நமது கண்களையும் காதுகளையும் பலமுறை தட்டிய விடயங்கள் தான். ஆனால் நாம் அவற்றில் கவனம் செலுத்துவதில்லை. நமது வழி தனி வழி என நாமே நம்மை பெரிய அறிவாளி என நினைத்துக் கொண்டு நாம் செல்லவேண்டிய வழியை விட்டு வேறு வழியை நோக்கித் தடுமாறி செல்கின்றோம்.

முதலில் எம்மனதில் ஒரு முன்னோடியை எண்ணி வைத்துக் கொண்டு அவரின் வாழ்வியலை ஆராய வேண்டும் அவர் கடந்து வந்த பாதை எப்படிப்பட்டது, அவரின் வெற்றிகள் தோல்விகள் என்பனவும், அவரின் ஒவ்வொரு படிமுறைகளிலும் அவரின் மனநிலை என்ன எனவும் அவரின் வாழ்வியல் சரிதையை நன்கு அறிவதோடு அவராகவே நாம் வாழப்பழக வேண்டும்.

நாம் வெற்றி பெற வேண்டும் என்றால் முதலில் கூறியவாறு எமது முன்னோடியை தெரிவு செய்வதோடு மேலும் சில குணாதிசயங்களை எமக்குள்ளே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவையாவன உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை என்பனவாகும் கடின உழைப்பும் தளராத முயற்சியும் தன்மேல் கொண்டுள்ள நம்பிக்கையுடன் தான் எடுத்துக்கொண்ட செயலினையோ அல்லது தொழிலையோ சிறப்பாக செய்து முடிக்க முடியும்.

தனக்கொரு வாய்ப்பு நழுவிப்போனாலும் பறவாயில்லை மற்றவருக்கு கிடைத்து விடக்கூடாது என்பதற்காக வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்கள் நம்மில் அதிகம்.

நாம் நமது வெற்றிக்கு உழைத்தால் போதுமானது



மற்றவர்களின் தோல்வி அவர்களின் செயலால், குணத்தால் தானாகவே வந்து சேரும். நல்லது நினைத்தால் நல்லது நடக்கும் என்பது முன்னோர்கள் வாக்கு ஆகும்.

உங்களுக்கான சவால் என்ன தெரியுமா ? உங்களுக்கு உரிய இடத்தை நீங்கள் தக்க வைத்துக்கொள்வது ஆகும். நீங்கள் ஏணியில் ஏறும் போது உங்கள் கால்களை இழுத்துவிடவும் நாற்காலியில் அமரும் போது நாற்காலியை தட்டிவிடவும் எத்தனையோ கைகள் பரபரக்கும் அதற்காக நீங்கள் கலங்க கூடாது.

எடுத்த காரியத்தை யாருக்காகவும், எதற்காகவும் கீழே போடாதீர்கள். உங்கள் இலக்கை வெற்றிப்பாதையின் நீளத்தை பரந்ததாக வைத்துக்கொள்ளுங்கள். ஒரே மூச்சில் அந்த இலக்கை அடைந்து விடலாம் என்று நினைத்தால் அது மிகப்பெரிய தவறு.

எல்லா இடத்திலும் சில சூட்சுமங்கள் தேவைப்படுகின்றது. பெரிதாக ஒன்றும் செய்வதற்கில்லை மனதை சுதந்திரப்படுத்துங்கள், சின்னச் சின்ன விடயங்களுக்குச் சோர்ந்து போகாத வகையில் மனதை பக்குவப்படுத்துங்கள், இயற்கையை இரசிப்பது, பாடுவது, ஆடுவது என எது முடியுமோ அதை தயங்காமல் செய்யுங்கள், பல தரப்பட்ட மனித முகங்களையும் அவர்கள் வாழக்கையும் நன்றாக கவனியுங்கள்.

உங்களை பக்குவப்படுத்த அது போதும் மேலும் ஒரு செயலை செய்கிறோம் என்றில்லாமல் எதை செய்கிறோம் என்ற தெளிவு வேண்டும். ஒரு செயலை செய்வதற்கு செலவாகும் நேரத்தை விட அதனால் கிடைக்கும் நன்மை தான் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்படவேண்டும். உன்னுள் நீயே சிந்தையை சிந்தனைகளால் திறந்து கொள் விந்தை உலகில் உன்னை உயர்த்திக்கொள்.

ம. உமாசங்கர், கலைப்பிரிவு மாணவன், தி / செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

## ஒரு மயானமும் காவல் தேவதைகளும் !

சூழமிச் சோகச் சூழலிடை
உனக்கென எதை எழுத?

ஆடிப்பாடிப் பின் அவலம் சுமந்து
நீங்கிய
சோலைவனத்தை தீயின் நாவுகள்
தின்று தீர்த்தன
நெற்கதிர்கள் நிரம்பிச் சலசலத்த
வயல்வெளிகளை
இரும்புச் சக்கரங்கள் ஊடுறுவித்
தகர்த்தன

மண்ணை மீட்டெடுக்கும்
போராட்டத்தில் மனிதர்கள்
வீழ்ந்தழிந்திட
பேய்கள் உலவிடும் பூமி மாத்திரம்
தரிசு தட்டிக் கிடக்கிறது
இரத்தம் உறிஞ்சிய மண்ணில்
எத்தகைய வசந்தம் துளித்திடுமினி?

யாருமற்ற பாழடைந்த நகரத்தின்
இடுபாடுகளினூடு
சூரியன் தயங்கித் தயங்கித் தலை
நீட்டும்

போர்தின்ற பூமியில் வீழ்ந்திடும்
கிரணங்கள்
ஒரு தலைமுறையின் தலைவிதியை
ஊமையாய் படிக்கும்
அந்திப் பொழுதில் பயமும் பீதியும்
தொண்டைக் குழியை நெறித்திட
பூதங்களின் காலடியோசைகேட்டுச்
சூரியன் நடுநடுங்கி
மறையும்

தளைகளை வெட்டியெறிந்திடப்
புறப்பட்ட
விடுதலைப் பிரவாகம் உனை வீடு
துறக்க வைத்தது
நீ
வாழ்ந்த தேசம் இன்றுனை
எந்தப் பாடலைக் கொண்டும்
வரவேற்கும் நிலையிலில்லை

நானும் நீயுமின்றி
இந்தப் பரம்பரையே தோள்களில்
சுமையழுந்திட
திசைக் கொன்றாய் சிதறுண்டு
போனது

கல்வியும் உழைப்பும் கனவுகளை
மெய்ப்பித்திட
ஆனந்தம் பூரித்த நாட்கள்
இனியில்லை
பாழடைந்த படகுத்துறைகள்
காடடர்ந்த பயிர்நிலங்கள்
தலைகருகிய கற்பகத்தருக்கள்
தரை மட்டமாகிப்போன எங்கள்
குடிமனைகள் எல்லாம்
பேய்கள் சன்னதம் கொண்டாடிய
கதையினைச்

சொல்லும்
அவசரப்பட்டு நீ
ஊரைக் காணும் ஆவலிலிங்கு
வந்துவிடாதே:

வதைத்து எரியூட்டப்பட்ட சோலை
நிலத்தினூடு
அணிவகுத்துச் செல்லும் காவல்
தேவதைகள்
அமைதியைப் பேணுகின்றன.

அந்த ஏகாந்தம் குடியிருக்கும்
மயானத்தைக் காண
உனக்கென்ன ஆவல்?
வந்துவிடாதே.

'பஹிமா ஜஹான்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிரடியில் புதிய . . .

தொடர்ந்தே சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பதவி உறுதிப்படுத்தல் கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. கல்வித் திணைக் களத்தில் நிலுவையாக இருந்த அனைத்து உறுதிப்படுத்தல் கோரிக்கைகளும் பணிப்பாளரினால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவ்வாறு பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவர்களிற்கான கடிதங்கள் முறையே இவ்வாரத்தில் அவர்களுக்கும், அவர்களது சுயவிபரக் கோவைக்கும் அவர்கள் பணியாற்றும் கல்வி வலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

தற்போது கிழக்கு மாகான கல்விப் பணிப்பாளரின் கவனம் ஆசிரியர்களின் பதவியுயர்வு மற்றும் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பது தொடர்பாகத் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதற்கமைய இவ்விரு விடயங்கள் தொடர்பான தகவல்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து கல்வித் திணைக்களம் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

## நான் வீடு திரும்ப . . .

ஐநூறு றியால்களை திரு. அப்துல் காதரிடம் கையளித்துள்ளார். அவ்வாறு கையளித்த பின்னர் அதனைத் தனது தாயின் ஊடாக மூதூரில் உள்ள வறியவர்களிடம் பகிர்ந்தளிக்கும் படியும் கேட்டுள்ளார். இவ்வாறு ரிசானா செய்தமையானது தனது மரணத்தைச் சில நாட்களுக்கு முன்னரேயே அவர் தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ளார்? என்னும் ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது. இருந்தும் திரு அப்துல் காதரிடம் இறுதியாக ரிசானா முன்வைத்த கேள்வி தான் வீடு திரும்புவதற்கு ஏதேனும் வாய்ப்புக்கள் உண்டா என்பதாகவே இருந்துள்ளது.

அப்துல் காதரின் கூற்றுப்படி ரிசானாவால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் குழந்தையின் தாயாரே ரிசானாவின் சிரச் சேதத்தை வன்மையாக விரும்பியதாகவும் அதனைத் தவிர வேறு எந்த விட்டுக்கொடுப்புக்களுக்கும் அவர் தயாராயிருக்கவில்லை என்பதும் தெளிவாகின்றது.

## குழந்தைப் பாலியல் குற்றச்சாட்டில் விகாராதிபதி கைது

திருக்கோணமலை மாவட்டத்தின் முதலிக்குளம் பிரதேசத்தின் விகாராதிபதி ஒருவர் குழந்தையொன்றுடன் கொண்டிருந்த பாலியல் வன்புணர்வுக் குற்றச்சாட்டில் கைதாகி உள்ளதாக இணையத்தளமொன்றின் செய்திகள் தெரிவிக்கின்றன.

றொட்டவெவ, இதாபெந்திவெவ என்ற கிராமத்திலுள்ள விகாரையின் அதிபதியான இவர் ஆறு வயதான ஆண் குழந்தையொன்றுடன் கொண்டிருந்த பாலியல் வன்புணர்வுக் குற்றச்சாட்டில் கைதாகியுள்ளார்.

அறுபது வயது மதிக்கத்தக்க இவ் விகாராதிபதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

வன்புணர்வுக்குள்ளான சிறுவன் திருமலைப் பொது வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவ்விணையத்தளம் தெரிவிக்கின்றது.

## ஷரி ஆ சட்டத் தீர்ப்பை . . .

தாயார் தமிழ் மிரருக்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ஷரி-ஆ சட்டப்படி வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் மூலம் அது எத்தகையதாக இருந்த போதும் நிரந்தரமான மறுமையில் அவருக்கு உயர்ந்த பேறுகிடைக்கும். அவர் இப்போது சுவனத்திற்குச் சென்றுள்ளதாகவே உணர்கின்றேன் எனத் தெரிவித்த அவர் தனது மகளின் விடுதலைக்காகப் போராடிய அனைவருக்கும் தனது நன்றியையும் தெரிவித்துள்ளார்.

## தேசிய புத்தாக்கப் . . .

முயற்சியால் உருவான புத்தாக்கக் கருவியே தேசிய மட்டத்தில் முதல் பரிசைத் தட்டிச் சென்றுள்ளது.

இவர்கள் உருவாக்கிய கருவியானது அதன் செயற்பாட்டுத் தொழில் நுட்பத்திற்காக இரு விருதுகளையும் பணப்பரிசையும் பெற்றுள்ளது.

செயற்பாட்டை இலகுபடுத்தல் சம்பந்தமான தொழில்நுட்பத்திற்காக ரூபா 25,000 பணப்பரிசையும், சுமை தூக்கலில் மனிதப் பாதுகாப்பு என்னும் தொழில் நுட்பத்திற்காக ரூபா 100,000 பணப்பரிசையும் வென்றுள்ளது. இப் பணப்பரிசுகளுடன் அம் மாணவர்களுக்கு கேடயமும், தங்கப் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

## தேசிய மட்டச் சமூக விஞ்ஞானப் போட்டியிலும் புனித சூசையப்பர் கல்லூரி மாணவர்கள் சாதனை

தேசிய மட்ட சமூக விஞ்ஞானப் பொது அறிவுப் போட்டியிலும் பங்குபற்றி புனித சூசையப்பர் கல்லூரியின் பதினொரு மாணவர்களில் ஐவர் வெற்றிகளை பதிவு செய்துள்ளனர்.

தரம் 7 தொடக்கம் தரம் 10 வரையான வகுப்புக்களின் மாணவர்களே இச் சாதனைகளைப் படைத்துள்ளதாக இக் கல்லூரியின் அதிபர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

இப் போட்டியில் முதலாம் இடங்களை தரம் 10ஐச் சேர்ந்த மாணவன் எம்.ஏ.எம் அவ்ஹாம், தரம் 9 ஐச் சேர்ந்த மாணவன் யு ஹரிஸ்குமார், தரம் 8 ஐச் சேர்ந்த மாணவன் டி.கஸரோன் போல் ஆகியோர் பெற்றுள்ளனர். 3ம், 4ம், 5ம் இடங்களை முறையே தரம் 8 ஐச் சேர்ந்த ல. சாருகேஸ், தரம் 07 ஐச் சேர்ந்த டி.போல் தருக்ஸன் மற்றும் சி.கிங்ஸ்ரன் ஆகியோர் பெற்றுள்ளனர்.

இவ் வெற்றிகளைக் கொண்டாடும் முகமாக புனித சூசையப்பர் கல்லூரியின் கல்விச் சமூகம் பாராட்டு விழாவொன்றை முன்னெடுத்தது. 10.01.2013 அன்று நிகழ்ந்த இப் பாராட்டு விழாவில் பிரதம அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு அரியநாயகம் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

புத்தாக்கப் போட்டியில் வெற்றியடைந்த மாணவர்கள் தமது பரிசுத் தொகையிலிருந்து ரூபா 15,000 த்தை பாடசாலையின் புத்தாக்கக் கழகத்திற்கு அன்பளிப்பாக இப் பாராட்டு விழாவில் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.







## ரிசானாவிற்குப் . . .

தண்டனைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

மூன்று சந்தேக நபர்களில் இருவர் பக்கீர் மொகமட் வஜுர்தீனும் சாகுல் அமீட் அப்துல் லத்தீவ் வும் ஏற்கனவே கைதாகித் தடுப்புக்காவலில் இருந்தனர். முதலாவது சந்தேக நபரான தம்லெப்பை அப்துல் சலாம் தலைமறைவாகியிருந்த நிலையில் அண்மையில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது சந்தேக நபர்கள் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டிருந்தனர். எனினும் முதலாவது சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொள்ளாத நிலையில் நடைபெற்ற விசாரணைகளின் பின்னர் 15.01.2013ல் முதலாவது சந்தேக நபரைக் குற்றவாளியாகக் கண்ட நீதிமன்றம் ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரு வருட கடூழியச் சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

## தாதியர்களுக்கும் . . .

வருகை தருபவர்களுக்கும் தரத்தைப் பிரித்து பார்க்க முடியாதிருப்பதுடன் தாதியர்களுக்குரிய மரியாதையைப் பெறமுடியாதிருப்பதாகவும் கருதியதாலேயே இம் முரண்பாடு தோன்றியுள்ளது.

இதனைத் தொடர்ந்து தாதியகள் அணியும் பணி உடையை ஒத்த உடையினை அணிய வேண்டாம் என திருமலை பொதுவைத்தியசாலையின் அதியட்சகரால் ஆணை பிறப்பிக்கப் பட்டதாகவும் அறிய முடிகின்றது. இவ்வாணையை மதித்து நடக்காத நிலையிலேயே கடந்த மாதங்களில் தாதியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக கடந்த சனிக்கிழமை 12.01.2013 அன்று பெண் சிற்றூழியர் ஒருவர் வைத்திய சாலையின் நீர்த்தாங்கியின் மீதேறி தமக்கு நீதி கிடைக்காவிட்டால் உயிரை மாய்த்துக் கொள்வேன் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சிற்றூழியர்களிற் சிலர் இப் போராட்டத்திற்காதரவு தெரிவித்துத் தாமும் அந் நீர்த்தாங்கியின் மீதேறி ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

உயரதிகாரிகளின் தலையீட்டால் முடிவுக்கு வந்த இப்போராட்டம் நீறு பூத்த நெருப்பாகவே உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

அதற்கும் மேலதிகமாக கடந்த வாரத்தில் பெண் சிற்றூழியர் ஒருவர் பணிவுடைத் தகராறினால் சகசிற்றூழியரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. **(இர்சாத்)**

## ரிசானாவிற்காக வெளியாகவுள்ள கவிதைத் தொகுதி

சவூதியில் சிரச் சேதத்திற்கு உள்ளான திருமலைக் குழந்தை ரிசானா நபீக்கின் ஞாபகார்த்தமாக கவிதைத் தொகுதியொன்றை வெளியிடும் முயற்சியில் கிண்ணியாவைச் சேர்ந்த கவிஞர் ஏ.கே முஜாரத் அவர்கள் இறங்கியுள்ளார்.

இக் கவிதைத் தொகுதிக்காக காத்திரமான கவிதைகளை கவிஞர்களிடமிருந்து எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இக் கவிதைத் தொகுதி பேனா பப்ளிகேசன் ஊடாக வெளிவரவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

காத்திரமான கவிதைகளை தாளின் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி எதிர்வரும் சனவரி 31ம் திகதிக்கு முன் கீழ்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். அத்துடன் கவிதைகளை தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அஞ்சல் முகவரி:
ஏ.கே.முஜாரத், பேனா பப்ளிகேசன், உமர்ரழி வீதி, மஹ்ரூப் நகர், கிண்ணியா 03.
மின்னஞ்சல் முகவரி:
firosmi.pena@gmail.com

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**

**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**


**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கணிதப் புதிர்

### எண்களை வட்டத்திற்குள் சிக்க வைக்க முடியுமா? முயற்சித்து பாருங்கள்



குழந்தைகளே இங்குள்ள புகைப்படத்தில் ஒன்பது சிறிய வட்டங்கள் உள்ளது இதில் நீங்கள் ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களை நிரப்ப வேண் டும். ஒரு எண்ணை ஒரு முறை மட்டுமே பயன்படுத்த வேண்டும். முடிவில் 3 மூன்று வட்டங்கள் உள்ள நான்கு நேர் கோடுகளின் கூட்டுத் தொகை ஒரே மாதி ரியாக இருக்க வேண்டும் முயற்சித்து பாருங்கள்




குட்டிக்கதை

## யார் பலசாலி

ஒரு காட்டில் சிங்கராஜா ஒன்று இருந்தது. அதற்கு தன்னுடைய பலத்தின் மீது மிகுந்த பெருமை. தன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்ற நினைப்பில் அந்த காட்டில் வாழும் சிறிய மிருகங்களை எல்லாம் பாடாய்படுத்தியது. இதனால் சின்ன மிருகங்கள் எல்லாம் ஆண்டவரிடம் அழுது புலம்பின. உடனே ஆண்டவர் ஒரு சிறிய கொசுவை கொண்டு சிங்கத்திற்கு பாடம்



புகட்ட விரும்பினார்.

ஒருநாள் சிங்கம் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பக்கமாக ஒரு கொசு வந்தது. முதலில் தன் காதருகே வந்து ரீங்காரமிட்ட கொசுவைப் பற்றி சிங்கம் அலட்சியமாக நினைத்தது. திரும்பத் திரும்ப கொசு தொந்தரவு கொடுக்கவே சிங்கத்திற்குக் கோபம் வந்துவிட்டது. யாரவன் எனக்குத் தொந்தரவு கொடுப்பது? என்று உருமிக் கொண்டே கோபத்துடன் சிங்கம் எழுந்தது.

கொசு கலகலவென நகைத்து, சிங்கராசாவே என்னை உங்களுக்கு அடையாளம் தெரிகிறதா? நான் தான் கொசு என்றது.

நீ யாராக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போ. என்னிடம் வந்து ஏன் தொந்தரவு செய்கிறாய்? என்று சிங்கம் கேட்டது.

நான் உங்களிடம் சண்டை போட வந்து இருக்கிறேன். முடியுமானால் என்னிடம் சண்டையிட்டு என்னைத் தோல்வியுறச் செய்யுங்கள் பார்க்கலாம் என கொசு சவால் விட்டது.

உனக்கு என்ன திமிர்? அற்ப ஜந்துவாகிய நீ என்னிடமா சண்டைக்கு வந்திருக்கிறாய்? நான் மூச்சு விட்டால் கூட நீ நிர்மூலமாகி விடுவாயே என்று கூறியவாறே சிங்கம் தன் முன்னங்கால்களை அதனிடம் வீசியது.

கொசுவோ மிகவும் சுலபமாகத் தப்பித்து அப்பால் பறந்து சென்றது.


கொசு தொலைந்தது என்று எண்ணிக் கொண்டு சிங்கம் நிம்மதியாகப் படுத்தது. ஆனால் கொசு மறுபடியும் வந்து சிங்கத்திற்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தது. சிங்கத்திற்குக் கோபம் தாள முடியவில்லை.

ஆகவே மறுபடியும் கொசுவை விரட்டியது. கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு சிறிய உருவமாக இருந்த கொசு மிகவும் எளிதாக சிங்கத்தை ஏமாற்றி அதனிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடிந்தது.

நெடுநேரம் சிங்கமும், கொசுவும் போராடின. அற்பக் கொசுவை சிங்கத்தால் என்ன செய்ய முடியும்? அதை விரட்ட, விரட்ட திரும்பத் திரும்ப வந்து சிங்கத்திற்குத் தொல்லை கொடுத்துக் கொண்டு இருந்தது.

கொசுவை ஒன்றும் செய்ய முடியாமல் சிங்கம் சோர்ந்துவிட்டது. ஓய்ந்து போய்க் கீழே படுத்துக் கொண்டது. கொசு கைகொட்டி ஏளனச் சிரிப்புச் சிரித்தது. மிருகங்களுக்கே அரசன் என்று சொல்லிக் கொள்ளும் உம்முடைய பலம் என்னிடம் பலிக்கவில்லை பார்த்தீரா? உம்மைவிட நான் பலசாலி என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஆகவே நான் தான் இந்தக் காட்டிற்கு அரசன், என்று வெற்றி முழக்கம் இட்டது.

சிங்கம் வெட்கி தலை குனிந்தது.




## அழகாய் இருக்க ஆசையா?



அழகு என்பது உடுத்தும் உடை, பொட்டு மற்றும் போடுகின்ற மேக் - அப் களால் மட்டும் முழுமை பெறுவது இல்லை. அழகுக்கு அடிப்படையாக அமைவது உடல்வாகு. அந்த உடலை காக்க சரியான முறையில் சத்துணவுகள் அவசியமாகின்றன. பொதுவாக எல்லா பெண்களும் அழகாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்களே தவிர அதற்கேற்ற உணவு வகைகளை கடைப்பிடிப்பதில்லை. காய்கறிகளும் பழவகைகளும் உடல் அழகுக்குப் பொருத்தமானவை. கீரை வகைகள், முருங்கை இலை, வாழைத்தண்டு, வாழைப்பூ போன்றவற்றில் உடல் அழகுக்கு தேவையான சத்துக்கள் உள்ளன என்பதுடன் நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகரிக்கிறது. ஆனால் தற்காலத்தில் அனைவரும் Fast food எனும் மாயைக்குள் விழுந்து சத்துள்ள உணவுகளுக்குப் பதில் சத்துள்ள விட்டமின் மாத்திரைகளை விழுங்குகின்றார்கள்.

எவ்வளவு அதிகமாக பழங்களையும், கீரை வகைகளையும் உணவுடன் சேர்த்துக் கொள்கின்றோமோ அவ்வளவு அழகான சருமத்தைப் பெறலாம். சிலருக்கு அழகிய முகத்தோற்றம் இருப்பினும் விட்டமின் ஏ குறைபாட்டினால் தோல் வரண்டு காணப்படும். இவ்வாறானவர்கள் பால், முட்டை, மீன் ஆகியவற்றை உண்ண வேண்டும்.

சிலருக்கு விரைவாக சருமத்தில் சுருக்கம் விழும். அதைத் தடுக்க “பீட்டா கரோட்டின்” என்ற சத்து தேவையாகும். அத்துடன் இதயநோயைத் தடுக்கவும், கொழுப்பைக் கட்டுப்படுத்தவும் இவ்வகை சத்து தேவைப்படும். எனவே இவர்கள் கரட், இனிப்பு கிழங்கு வகைகள், தர்பூசணி, தக்காளி, பிளம்ஸ் போன்றவற்றை எடுக்கலாம்.

ஒருவர் அழகாக இருப்பதற்கு முகப் பொலிவு மற்றும் உடல் கட்டமைப்பு எவ்வளவு முக்கியமோ அதே போல் தலைமுடியும் மிகவும் முக்கியமானதாகும். தலைமுடிக்கு அலங்காரம் செய்யும் போது உங்கள் முகத்திற்கும், உடல் கட்டமைப்புக்கும் பொருந்தக்கூடிய அலங்காரங்களை செய்யவும். பொடுகு தொல்லை இருப்பவர்கள் அதற்கேற்ற முறையில் அலங்காரத்தை செய்தல் நன்று. பொடுகை நீக்குவதற்கான சில டிப்ஸ்.

- தேங்காய்ப்பால் அரை கப், எலுமிச்சைச் சாறு நான்கு தேக்கரண்டி மற்றும் ஊற வைத்து அரைத்த வெந்தயம் இம்மூன்றையும் கலந்து தேய்த்து ஊற வைத்து தலைக்கு குளித்தால் பொடுகுத் தொல்லை நீங்குவதோடு, கூந்தலின் நுனி வெடிக்காமல் இருக்கும்.
- தலையில் தயிர் தடவி அரை மணி நேரம் ஊற வைத்து விட்டு பிறகு குளிக்கலாம்.
- பசளைக்கீரையை அரைத்து தலைக்கு தேய்த்து குளித்து வர பொடுகு நீங்குவதோடு நல்ல கண்டிஷனராகவும் பயன்படும்.
- வேப்பம் பூவையும், வெல்லத்தையும் நல்லெண்ணெயில் சேர்த்து காய்ச்சி வடிகட்டி அந்த எண்ணெய்யை தலைக்கு வைத்து வரலாம்.
- குளிக்க வைக்கும் வெந்நீரில் வேப்பிலையை போட்டு கொதிக்க வைத்து குளிக்கலாம்.

## ஒடியல் கூழ்

**தேவையான பொருட்கள் :**

ஒடியல்மா - 1 சுண்டு (நிரப்பி), பயிற்றங்காய் - 100 கிராம், மரவள்ளிக் கிழங்கு - 100 கிராம், கத்தரிக்காய் - 100 கிராம், பலாக்கொட்டை - 200 கிராம், கடலை - 100 கிராம், வாழைக்காய் - 1 (பெரிது), செத்தல் மிளகாய் - 20, மிளகு - 1 தே.கரண்டி (நிரப்பி), மஞ்சள் - 1 துண்டு (2" நீளம்), உள்ளி - 5 பெரியபல்லு, பழப்புளி - பாக்களவு, புழுங்கலரசி - 1 பிடி, முள்ளில்லாத மீன்வகை (இறால், நெத்தலி) - 1/2 கிலோ கிராம், நண்டு - 2, பாரைமீன் தலை - 1, சிறிய மீன் கருவாடு - 50 கிராம், முசுட்டையிலை - 10, பல்லுப்போல் வெட்டப்பட்ட தேங்காய்ச் சொட்டு - 1/2 சுண்டு, உப்பு - அளவிற்கு

**செய்முறை :**

கடலையைக் கழுவி மூன்று மணி நேரம் ஊறவைக்கவும். செத்தல் மிளகாய், மிளகு, உள்ளி, மஞ்சள் என்பவற்றிற்கு ஓரளவு நீர் சேர்த்துப் பட்டுப்போல் (பசுந்தையாக) அரைத்தெடுத்துக் கொள்ளவும். மீன்வகைகள், கருவாடு மற்றும் நண்டு என்பவற்றை நன்றாகத் துப்புரவு செய்து கழுவி எடுத்துத் தனியாக வைத்துக் கொள்ளவும்.

பின்னர் மரவள்ளிக் கிழங்கு, பயிற்றங்காய், கத்தரிக்காய், வாழைக்காய், பலாக்கொட்டை என்பவற்றைத் துப்பரவாக்கிச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கழுவி வைக்கவும்.

அதன் பின்பு பாத்திரத்தில் பழப்புளியையிட்டு ஒரு தம்ளர் தண்ணீர் விட்டுக் கரைத்து வைத்துக் கொள்க.

பின்னர் ஒடியல்மாவை வேறொரு பாத்திரத்தில் இட்டு, தண்ணீரை அளவாகச் சேர்த்து கூழ் பதமாக நன்றாகக் கரைத்து (கட்டியாகவோ அல்லது தண்ணியாகவோ அல்லாமல்) அரைமணி நேரம் ஊற வைத்தபின் எடுத்து ஒரு துணியில் இட்டுப்பிழிந்தெடுத்துப் பிறிதொரு பாத்திரத்தில் போட்டு, அரைத்த கூட்டையும் சேர்த்துக் கரைத்து வைத்துள்ள 1 தம்ளர் பழப்புளியையும் விட்டு, அளவிற்குத் தண்ணீரும் விட்டு நீர்ப்பதமாகக் கரைத்து வைக்கவும்.

பின்னர் சோஸ் பானில் (ஒரு கொத்து அரிசி அவியக்கூடிய பாத்திரம்) அதன் அரைவாசிக்குத் தண்ணீர் விட்டுக் கொதிக்கவைத்துக் கொதித்தபின் கழுவி வைத்துள்ள மரக்கறி வகை, முசுட்டையிலை, கழுவிய அரிசி, கடலை என்பவற்றையும் இட்டு அவியவிடவும்.

இவை முக்கால்ப் பதமாக அவிந்த பின்பு துப்புரவு செய்த மீன் வகைகள், கருவாடு என்பவற்றையும் போட்டு அவிய விடவும்.

பின்னர் மரக்கறிவகை நன்றாக அவிந்ததும் ஒடியல்மாக் கரைசலையூற்றி நன்றாகக் கரண்டியால் கலக்கி அளவிற்கு உப்பும் சேர்த்து தேங்காய்ச் சொட்டும் கலந்து இறக்கிச் சூட்டுடன் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### பிரதம நீதியரசரை அப்பதவியிலிருந்து இளைப்பாறுமாறு சனாதிபதி வேண்டுகோள்

கடந்த 12ம் திகதி அன்று சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்காவுக்கு தற்போதும் முழு ஓய்வூதிய கொடுப்பனவுடன் ஓய்வு பெறுவதற்குரிய வாய்ப்பு உள்ளதென தெரிவித்தார்.

மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளை Temple green இல் சந்தித்தார். இச்சந்திப்பில் சிராணி திலகவர்தன, நிமால் காமினி அமரதுங்க, சலீம் மர்சூப், ஸ்ரீபவன், ரட்ணாயக்க, சந்திரா ஏகநாயக்க, S.I.இமாம், சத்யா ஹெட்டிகே, பிரயசாத் டெப், ஈஸா வனசுந்தர ஆகிய நீதிபதிகள் கலந்து கொண்டிருந்தனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள பிரதம நீதியரசருக்கெதிரான குற்றப்பிரேரணையின் பால் இறுதித் தீர்மானத்தை சனாதிபதி எடுக்கவேண்டியுள்ளது.

சனாதிபதியினால் விடுக்கப்படும் ஆணையொன்றால் சிராணி பண்டாரநாயக்காவின் பதவி பறிக்கப்படும் வாய்ப்பு எக்கணத்திலும் உள்ளது. நீதிபதிகளுடனான இச்சந்திப்பின் போது சனாதிபதி நிறைவேற்றதிகாரத்தினை ஒரு கையிலும் நீதித்துறையை மறுகையிலும் தாங்கிய தனது பொறுப்பையும் அது தொடர்பான நடவடிக்கைகளையும் விளக்கியுள்ளார். அத்துடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரைக்கும் தனது பதவிக் காலத்தை நீடிக்குமாறும் அதற்கான சில நிபந்தனைகளை விதித்தும் சிராணி பண்டாரநாயக்காவினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை தான் நிராகரித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். சிராணி பண்டாரநாயக்க தானாகவே பதவி விட்டு விலகுவாராயின் அவருக்கெதிராக எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதிருப்பேன் எனவும் அவர் உறுதி கூறியுள்ளார். எனினும் சிராணி பண்டாரநாயக்காவின் சட்டத்தரணிகள் கூற்றுப்படி சிராணி பண்டாரநாயக்கா பதவி நீடிப்பு சம்பந்தமாக எவ்வித வேண்டுகோளையும் சனாதிபதியை நோக்கி விடவில்லை என்றும் அது சார்ந்த எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்கள். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட 10 மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளும் 90 நிமிடங்கள் வரை நீடித்த அக்கூட்டத்தில் எவ்வித கேள்விகளையோ, விடயங்களையோ, கருத்துக்களையோ பகிரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கட்சி தாவிய உறுப்பினர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை – ஐக்கிய தேசியக் கட்சி

பிரதம நீதியரசரின் குற்றப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த கட்சி தாவிய பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாக ஐதேக அறிவித்துள்ளது. அக் கட்சியின் செயலாளர் நாயகம் திஸ்ஸ அத்தநாயக்கவின் கூற்றுப்படி பிரதம நீதியரசருக்கெதிரான குற்றப்பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கவே ஐதேக தீர்மானித்திருந்தது. ஆனால் அம்முடிவையும் மீறி கட்சி தாவிய பதினாறு பாராளுமன்ற உறுப்பினர்களும் அதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். எனவே அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். இதற்கான கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் கட்சி தாவி தற்போது பிரதம அமைச்சராகவுள்ள A.R.M.அப்துல் காதர் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பதை தெரிவிப்பதற்கு ஐ.தே.கவுக்கு எந்த அருகதையும் இல்லை என தெரிவித்தார்.

### புதிய பிரதம நீதியரசருக்கெதிராக செயற்படும் முனைப்புக்கள் அதிகரிக்கின்றது.

நியமிக்கப்படவுள்ள புதிய பிரதம நீதியரசருடன் ஒன்றாகச் செயற்பட வேண்டாம் என நீதிபதிகளை கேட்டுக்கொண்டுள்ளது இலங்கை சட்டவாளர் சங்கம். சிரேஸ்ட சட்டத்தரணிகள் மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளை நோக்கி இவ்வேண்டுகோளை விடுத்துள்ளனர். அவர்கள் சிராணி பண்டாரநாயக்கவை நீக்குவதும் புதிய பிரதம நீதியரசரை நியமிப்பதும் சட்ட ரீதியற்றது என்றும் அரசியல் முறைமைக்கு ஒவ்வாதது என்றும் மீயுயர் நீதிமன்றத்தாலும், மேன் முறையீட்டு நீதிமன்றத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட தீர்ப்புக்களே ஆகும்.

## The Sunday Observer:

### அவிசாவெல சிறைச்சாலை உடைப்பு சம்பந்தமான விசாரணையில் குழு

அவிசாவெல சிறைச்சாலையினை உடைத்து 10 கைதிகள் தப்பிச் சென்றது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையினைச் சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை சிறைச்சாலை புனர்வாழ்வு அமைச்சு நியமித்துள்ளது. இக்குழு சிறைச்சாலை உடைப்புக்கு ஏதுவாக சிறைச்சாலையின் பாதுகாப்பு அன்று பலவீனமாய் இருந்ததா என்று ஆராயும். இவ்வாறு தப்பிச் சென்றவர்களுள் மூவர் கடந்த வாரம் கொஸ்கம காவல் துறையினரால் கைது செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### அரசாங்கம் நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும் – முன்னாள் பிரதம நீதியரசர்.

மூன்றில் இரண்டு மேலதிக பெரும்பான்மையால் சிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராக குற்றப்பிரேரணையை பாராளுமன்றில் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து நீதித்துறையின் சுதந்திரத்தை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் N.சில்வா தெரிவித்துள்ளார். அடுத்த பிரதம நீதியரசரின் நியமனத்தின் போது சிரேஸ்டத்துவமும் கல்வித் தகமையும் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்திருப்பதுடன் அதனடிப்படையில் புதிய சர்ச்சைகள் எழாதிருக்க அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். மேலும் அரசிற்கும் சட்டவாளர் சமூகத்திற்குமிடையில் தொடர்ந்தும் முரண்பாடுகளை முன்கொண்டு செல்வது ஆரோக்கியமானது அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

### 1000 பேரை அமத்தியது அதிகாரசபை

கடந்த இரு மாதங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வியாபாரிகளை பாவனைக்குதவாத பொருட்களை விற்ற குற்றச்சாட்டின் கீழ் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை கைது செய்துள்ளது. கொழும்பு பெட்டாச் சந்தையில் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய சுற்றிவளைப்பில் வெங்காயம், கிழங்கு, சீனி, மரக்கறி மற்றும் பால்மா போன்றவை பாவனைக்குதவாத நிலையிலும் விற்பனைக்குத் தயாராயுமிருந்த போது கைப்பற்றப்பட்டன. இதனைத்தொடர்ந்து பாவனையாளர் அதிகார சபை பறக்கும் படையொன்றை நியமித்து எழுந்தமான பரிசோதனையை மேற்கொள்ளவுள்ளதாக தெரியவந்துள்ளது. அத்துடன் விலையைக் கூட்டி விற்பனை செய்யும் வியாபாரிகளும் கைது செய்யப்படவுள்ளனர்.

### பிரான்சின் ஊடகமொன்று இலங்கையின் அபிவிருத்திகளை நல்லவிதமாக வெளிக்காட்டியுள்ளது.

பிரான்ஸ் - 2 எனும் பிரான்ஸ் தொலைக்காட்சியானது யுத்தத்தின் பின்னரான இலங்கையின் அபிவிருத்திகளை திறம்பட ஆவணப்பட மொன்றினூடாக வெளிக்காட்டியுள்ளது. இவ் ஆவணப்படம் தொடர்பாக இரு தசாப்தங்களாக பிரான்சில் வசிக்கும் இலங்கையர் ஒருவர் தெரிவித்த போது எவ்வாறு இலங்கை அபிவிருத்தியை நோக்கி தனது வளங்களை பகிர்ந்துள்ளது என்பதை வெளிக்காட்டக்கூடிய சிறந்த ஆவணப்படங்களை பார்க்கக்கூடியதாக உள்ளதாக தெரிவித்துள்ளார். இவ் ஆவணப்படத்தை தயாரிப்பதற்காக பிரான்சில் இருந்து படப்பிடிப்பாளர்கள் இலங்கைக்கு பயணம் செய்தது குறிப்பிடத்தக்கது. திறந்த நல் மனத்துடன் உண்மைகளை வெளிக்காட்டக் கூடிய இவ்வகை ஆவணப்படங்கள் சர்வதேச ஊடகங்களில் பார்ப்பதானது ஒரு உன்னதமான அனுபவம் என பாரிசில் இருக்கும் இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

### உறவினர்கள் என்ற பெயரில் தப்பிச் செல்லும் விதி மீறுபவர்கள்.

போக்குவரத்து விதிகளை மீறும் பலர் காவல்துறை மா அதிபரின் உறவினர்கள் என்ற போர்வையில் தண்டனையிலிருந்து தப்பிச் செல்வது காவல்துறை மா அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து காவல்துறை மா அதிபர் தனது அலுவலகர்களுக்கு விடுத்த பணிப்புரையில் அவ்வாறு போக்குவரத்து விதி மீறுபவர்களைத் தண்டிக்குமாறும் தனது உறவினர்கள் என்றால் தண்டிக்காது விடுவதில் எவ்வித நியாயமும் இல்லை என்றும் தெளிவாக கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Leader

### சர்வதேச நீதிமன்று நோக்கி நகரும் சிராணியின் குற்றப் பிரேரணை

சிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிரான குற்றப்பிரேரணையை தொடர்பான வழக்கினைச் சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்த சட்டவாளர் குழு தீர்மானம் செய்துள்ளது.

அத்துடன் சர்வதேச சட்டவாளர் சங்கத்தின் அனுசரணையையும் அணிசேரா நாடுகளினதும் ஐக்கிய நாட்களினதும் ஆதரவையும் இவ் விடயத்திற்குத் திரட்டப்போவதாக சட்டவாளர் திரு நுவான் போபகே தெரிவத்துள்ளார்.

நீதிபதிகளின் சிரேட்டத்துவ வரிசையைப் பின்பற்றாமல் அரசிற்கு மிக நெருக்கமானவர்களை பிரதம நீதியரசராக நியமிக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே பெரும்பாலான அரச பாராளுமன்றத்தினர் இருப்பதாகவும் தெரிவித்தார். தற்போதைய சிரேட்டத்துவத்தின் படி நீதிபதி சிராணி திலகவர்த்தனவே அடுத்த பதவி வரிசையில் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட வேண்டியவராகின்றார். அவரைத் தவிர ஏனைய எவரையும் தாம் பிரதம நீதியரசராக ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என போபகே தெரிவித்தார்.

### அரசுடன் இணைவதான செய்தி வதந்தியே – முன்னால் பிரதம நீதி அரசர்

தற்போதைய பிரதம நீதியரசருக்க எதிராண குற்றப் பிரேரணையை ஆதரித்துக் கருத்துக்களை வெளிப்படுத்தி வந்த முன்னால் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அரசுடன் இணையவுள்ளதாக எழுந்த செய்திகள் வெறும் வதந்தியே எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவா அரச தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியின் போது சிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிராகத் தொடரப்பட்ட கற்றப்பிரேரணை நடவடிக்கைக்ள் அரசியல்ச் சட்டத்திற்கு அமையவே இருந்தன எனத் தெரிவித்தார்.

### உடல் கட்டமைப்புப் பயிற்சிகள் ஒரு கலையே! அவை விளையாட்டுக்கள் அல்ல

விளையாட்டுத் துறை அமைச்சின் செய்திக் குறிப்பின் படி பொடி பில்டிங் என ஆங்கிலத்தால் அளிக்கப்படும் உடற்கட்டமைப்பைப் பேணுவது ஒரு கலையாகக் கருதப்பட வேண்டுமேயொழிய ஒரு விளையாட்டாகக் கருதப்படக் கூடாது என தெரிய வருகின்றது.

அதற்கமைய விளையாட்டமைச்சின் கீழுள்ள இக்கலையினை கலாசார அமைச்சின் கீழ் மாற்றுவதற்கான நடவடிக்கைகளை விளையாட்டுத்துறை அமைச்சு முன்மொழிந்துள்ளது.

### சவூதிக்குப் புதிய தூதுவர்

இலங்கை சவூதி அரேபியாவிற்கான தனது தூதுவரை புதிதாக நியமிக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ரிசானாவின் சிரச்சேதத்திற்குக் கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தும் முகமாக முன்னைய சவூதித் தூதுவரை இலங்கை மீளப் பெற்றுக் கொண்டுள்ளது. அவ்வாறு மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள தூதுவரிற்கும் ரிசானாவின் சிரச் சேதத்திற்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை என அமுனுகம தெரிவித்துள்ளார்.

### சிறையில் ஐந்து நட்சத்திர உணவு ண்ணும் விபச்சார விடுதி உரிமையாளர்.

மிக முக்கிய புள்ளிகளுடன் தொடர்புடையவரும் அவர்களால் மிகவும் காதலிக்கப்படுபவருமான விபச்சார விடுதியை நடாத்தியதாக கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு ஐந்து நட்சத்திர விடுதி உணவுகள் வழங்கப்படுவது தெரியவந்துள்ளது. நாளொன்றுக்கான அவரது மூன்று நேர உணவும் வெளியிலிருந்து விநியோகிக்கப்படுவதாகவும் அதற்காக அவர் சரியான இடத்தில் தொடர்பில் உள்ளதாகவும் உள்ளிருப்பவர்கள் தெரிவிக்கின்றனர். கொழும்பு நகரத்திலிருந்து வெகு தொலைவில் இல்லாத சிறையில் உள்ளார் இவர். வாரமொருமுறை மட்டுமே சிறைக்கைதிகளை பார்ப்பதற்கு ஏனையோருக்கு அனுமதி உண்டெனினும் இவருக்கு நாளாந்தம் உணவு வந்து சேருகிறது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# முரசின் விளையாட்டு செய்திகள்

## ஜோகோவிச் ஹாட்ரிக் பட்டம் வெல்வாரா?

ஒவ்வொரு ஆண்டும் ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய 4 கிராண்ட்சிலாம் டென்னிஸ் போட்டிகள் நடைபெறும்.



இந்த ஆண்டின் முதல் கிராண்ட்சிலாம் போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்னில் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது.

27ம் திகதி வரை நடைபெறும் இந்தப்போட்டியில் ஜோகோவிச் (செர்பியா), ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), ஆண்டி முர்ரே (இங்கிலாந்து), டேவிட் பெரர் (ஸ்பெயின்), தாமஸ் பெர்டிச் (செக்குடியரசு) போன்ற முன்னணி வீரர்களும் விக்டோரியா அசரென்கா (பெலாராஸ்), மரியா 'ரபோவா (ரீயா), செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), ரட்வன்ஸ்கா (போலந்து), கெர்பர் (ஜெர்மனி) போன்ற முன்னணி வீராங்கனைகளும் பங்கேற்கிறார்கள்.

உலகின் முதல்நிலை வீரரான ஜோகோவிச் ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்று புதிய வரலாற்று சாதனை படைப்பாரா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2011, 2012-ம் ஆண்டுகளில் அவர் ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்றுள்ளார். தொடர்ந்து 3-வது முறையாக வென்று ஹாட்ரிக் சாதனை படைக்கும் ஆர்வத்துடன் ஜோகோவிச் உள்ளார்.

ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை தொடர்ந்து 3-வது முறையாக யாரும் வென்றது இல்லை.

ஜோகோவிச் வென்றால் புதிய சாதனை புரிவார். ஜோகோவிச் கடந்த ஆண்டு ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை மட்டுமே வென்றார். பிரெஞ்சு ஓபனில் நடாலிடமும், அமெரிக்க ஓபனில் முர்ரேயிடமும் இறுதிப்போட்டியில் தோற்றார்.

காயம் காரணமாக நடால் ஆஸ்திரேலிய ஓபனில் ஆடவில்லை. அவருக்கு பெடரர், முர்ரே ஆகிய இருவருமே கடும் சவாலாக இருப்பார்கள்.

(சுதன்)

## மலாகா அணிக்கெதிரான லா–லிகா கால்பந்து லீக் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி

ஸ்பெயினில் "லா லிகா" கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. மாட்ரிட் நகரில் நடந்த லீக் போட்டியில் பார்சிலோனா, மலாகா அணிகள் மோதின. இதில் முதல் பாதியில் அபாரமாக ஆடிய பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி 26வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இரண்டாவது பாதியில் பார்சிலோனாவின் பேப்ரிகாஸ் 49வது நிமிடத்தில் இரண்டாவது கோலும், தியாகோ 81வது நிமிடத்தில் மூன்றாவது கோலும் அடித்து அணியை 3-0 என்று முன்னிலை பெற வைத்தனர். முதல் பாதியில் கோல் ஏதும் அடிக்காத மலாகா அணிக்கு இரண்டாவது பாதியின் கடைசி நேரத்தில் புனானோட் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார். போட்டி முடிவில் 3-1 என்ற கணக்கில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

இதுவரை விளையாடிய 19 லீக் போட்டியில் 18 வெற்றி, ஒரு சமன் உட்பட 55 புள்ளிகளுடன் உள்ள பார்சிலோனா அணி முதலிடத்தில் உள்ளது. அட்லடிகோ மாட்ரிட் (44 புள்ளி), ரியல் மாட்ரிட் (37), ரியல் பெடிஸ் (34), மலாகா (31) ஆகிய அணிகள் முதல் 05 இடங்களில் உள்ளன



மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்

The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

## அபார வெற்றி

## இந்தியா இங்கிலாந்து அணியை 127 ஓட்டங்களால் வென்றது

இங்கிலாந்து இந்திய அணிகளுக்கிடையேயான 02-வது ஒரு நாள் போட்டி கொச்சியில் கடந்த செவ்வாய் கிழமை (15.01.2013) நடைபெற்றது.

நாணயசுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. ஓட்டக்குவிப்புக்கு சாதகமாக இருக்கும் எனக் கருதப்பட்ட இந்த ஆடுகளத்தில் இந்திய அணியின் தொடக்கம் மோசமாக இருந்தது. 18 ஓட்டங்கள் எடுப்பதற்குள் தொடக்க வீரர்கள் ஆட்டம் இழந்தனர். 3-வது விக்கெட்டுக்கு வீராட்கோலியுடன், யுவராஜ் சோடி சேர்ந்தார். 32 ஓட்டங்கள் எடுத்த நிலையில் யுவராஜ் ட்ரெட்வெல் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். அவரைத் தொடர்ந்து கோலி 37 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க இந்திய அணி 26 பந்துபரிமாற்றங்களில் 119 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 4 விக்கெட்டுகளை இழந்தது. இதையடுத்து,சுரேஸ் ரெய்னாவும், கேப்டன் டோனியும் களமிறங்கி இங்கிலாந்து பந்துவீச்சை பொறுமையாக கையாண்டனர். திறமையாக விளையாடிய ரெய்னா அரை சதத்தை கடந்து 55 ஓட்டங்கள் எடுத்தநிலையில் பின் பந்தில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து டோனியுடன ரவீந்திர ஜடேஜா ஜோடி சேர்ந்தார். இருவரும் சேர்ந்து இங்கிலாந்து பந்துவீச்சாளர்களின் பந்தை நாலாபுறமும் சிதறடித்தனர். திறமையாக விளையாடிய இருவரும் அரைசதத்தைக் கடந்தனர். டோனி 72 ஓட்டங்கள் எடுத்தநிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 50 பந்து பரிமாற்ற முடிவில் இந்தியஅணி 6 விக்கெட் இழப்பிற்கு 285 ஓட்டங்கள் எடுத்து இலக்கை நிர்ணயித்தது. இங்கிலாந்து அணிதரப்பில் பின், டென்பேச் தலா 2 விக்கெட்டுகளும், ஓக்ஸ், ட்ரெட்வெல் தலா 1 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதையடுத்து 286 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கைத் துரத்திய இங்கிலாந்து அணிக்கு, இந்திய பந்துவீச்சாளர்கள் கடும் நெருக்கடி அளித்தனர். 2-வது பந்துபரிமாற்றத்தில் இயன் பெல்லை (1 ஓட்டம்) வெளியேற்றி, இந்தியாவின் விக்கெட் கணக்கைத் தொடங்கினார் ஸாமி அகமது. அதன்பின்னர் அலைஸ்டர் குக் (17 ஓட்டங்கள்),பீட்டர்சன்(42 ஓட்டங்கள்),மோர்கன் (ஓட்டங்கள் இல்லை) ஆகிய முன்னணி வீரர்களை புவனேஸ்குமார் ஆட்டமிழக்க செய்தார். மறுமுனையில் அணியை சரிவில் இருந்த மீட்கப் போராடிய ரூட் 36 ஓட்டங்கள் எடுத்தநிலையில், ஜடேஜா பந்தில் ஆட்டமிழந்தார். அதே பந்து பரிமாற்றத்தில் கிறிஸ் வோக்ஸ் ஓட்டங்கள் ஏதுமின்றி ஆட்டமிழந்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 135-ஐ தொட்டபோது அஸ்வினின் பந்து பரிமாற்றத்தில் அடுத்தடுத்த பந்துகளில் டிரெட்வெல்(1 ரன்), பின்(ரன் இல்லை) ஆகியோர் ஆட்டமிழந்தனர்.

கடைசி விக்கெட்டான டென்பேச் 2 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, இங்கிலாந்து அணி 36 பந்துடி பரீமாற்றங்களில் 158 ஓட்டங்களுக்குள் சுருண்டது. சமித் பட்டேல் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். முதல் போட்டியில் அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஆடிய இந்திய அணி, இப்போட்டியில் 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

(சுதன்)



## சட்டமாகவுள்ள 48 மணி நேரக் காவல்த்துறைத் தடுப்பு

சந்தேக நபர்களை 48 மணி நேரம் காவல்த்துறை அலுவலகத்தில் கைது செய்து வைத்திருக்கும் அனுமதி சட்டமாகவுள்ளது.

தற்போது 24 மணி நேரத்திற்குள் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்திற்கு முன்னிலைப்படுத்த வேண்டிய தேவை காவல்த்துறைக்கு உள்ளது. அக் கால வரம்பை 48 மணி நேரமாக நீடிப்பது தொடர்பான சட்ட மூலம் 2012 ஒக்டோபர் மாதம் 11ம் திகதி நாடாளு மன்றில் சமர்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல நிலை விவாதங்களைத் தாண்டி இச் சட்டமூலம் சட்டமாக உருவாகுவதற்காக எதிர்வரும் 22ம் திகதி பாராளுமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளது.

SS Digital's
Printers for all requirements
இப்பொழுது திருமலையிலும்
சிறந்த வடிவமைப்பு
தகுந்த விலை
சிறந்த தரம்
அனைத்துவிதமான அழைப்பிதழ்களும் அச்சிடுவதற்கான சிறந்த தேர்வு
#58, Vidyalayam Road, Trincomalee.
Off: 026 2224933 Mob: 0715415854, 0773663103 & ssdigitals.shan@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 19. 01 2013ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.